Registered as a Newspaper　　பக்கங்கள் 04　　விலை: ரூபா 5-00

# ஈழநாதம்

THE EELANAATHAM　　மக்கள் தினசரி　　Peoples Daily

நாதம் 04　　திருவள்ளுவர் ஆண்டு 2024　　ஆவணி 24　　[09-09-1993]　　வியாழக்கிழமை　　ஓசை 203

## மலையக தோட்டத் தொழிலாளர்கள் பெருமளவில் இடம் பெயர்வு

மஸ்கெலியா பகுதியில் உள்ள தனியார் தோட்டங்களில் தொழில் புரிந்த நூற்றுக்கணக்கான குடும்பங்கள் காலி, தெனியாய பகுதியிலுள்ள தேயிலை தோட்டங்களுக்கு இடம்பெயர்ந்துள்ளனர். கடந்த வாரம் மட்டும் சுமார் 500 பேர் இவ்வாறு இடம் பெயர்ந்துள்ளனர். இப்பகுதியிலுள்ள தனியார் தோட்டங்களில் மட்டுமல்ல கம்பனிகள் பொறுப்பேற்றுள்ள தோட்டங்களிலும் கடந்த சில மாதங்களாக வேலை நாட்கள் குறைக்கப்பட்டதையடுத்து போதுமான வருமானமின்றி தொழிலாளர்கள் சிரமத்திற்குள்ளாகியுள்ளனர். இத்தகைய சூழ்நிலையில் தொடர்ந்து இவ்வாறு மலையகத்திலிருந்து தோட்டத் தொழிலாளர்கள் வேலையின்மையால் இடம்பெயர்ந்தால் மலையகத்தில் எமது அரசியல் பலம் குறைந்துவிடும் என இப்பகுதி மக்கள் சுட்டிக்காட்டியுள்ளனர். இதே போன்று இப்பகுதியில் தோட்ட நிர்வாகங்களை பொறுப்பேற்ற தனியார் கம்பனிகள் சந்தனாய் பகுதிக்கு இடம்பெயர (4ஆம் பக்கம் பார்க்க)

# கொழும்புப்படை முகாம்களையும் புலிகள் தகர்த்து விடுவர்!

## சிறிமாவோ பண்டாரநாயக்கா அச்சம்

[கொழும்பு]

கொழும்பில் உள்ள பாதுகாப்பு படைகளின் முகாம்களைத்தகர்த்து அங்குள்ள ஆயுதங்களையும் வெடிமருந்துகளையும் தாம் விரும்பிய இடங்களுக்கு எடுத்துச் செல்லுமளவிற்கு விடுதலைப் புலிகள் துணிச்சலான சக்தியை பெற்றுள்ளனர்என எதிர்க்கட்சித்தலைவி திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்கா தெரிவித்தார். கொழும்பில் பத்திரிகையாளருடனான சந்திப்பு ஒன்றில் வைத்து அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் இத்தகைய விடுதலைப் புலிகளை அனைத்து மக்களும் ஒன்று திரண்டால் மட்டுமே பலவீனப்படுத்த முடியும் என்றும் கூறினார்.

மணலாறில் இராணுவ முகாமை விடுதலைப் புலிகள் தாக்கி பலஇராணுவத்தினரை கொன்றதுடன் பெருமளவு ஆயுதங்களை காடுகளுக்கூடாக கொண்டு செல்லும்வரை கைகட்டி பார்த்துக்கொண்டு இருந்த தற்போதைய அரசை மக்கள் இனியும் நம்பத்தயாராக இல்லை.

இம்முகாம் மிகவும் பாதுகாப்பாக அமைக்கப்பட்டிருந்த ஒரு முகாம். இதனையே விடுதலைப் புலிகள் முப்பது நிமிடங்களில் தரைமட்டமாக்கியதுடன் அங்கிருந்த அனைத்து இராணுவ தளபாடங்களையும் எடுத்துச் சென்றுள்ள சம்பவமானது எவராலும் கற்பனை செய்து கூடப்பார்க்க முடியாத ஒன்றாகும்.

எனவேதான் இதுபோன்ற ஒரு சம்பவம் இந்நாட்டில் இனியும் நடைபெறாது இருப்பதை உறுதிப்படுத்திக் கொள்வதற்காகவே நாட்டு மக்கள் அனைவரும் ஒன்றுபட்டு செயல்பட வேண்டும் என தான் அழைப்பு விடுத்ததாக அவர் தெரிவித்தார்.

காரைதீவுப் பகுதி

## அதிரடிப்படை தலைமை புதியவர் நியமனம்

(காரைதீவு)

காரைதீவு விசேட அதிரடிப்படை தலைமையகத்திற்குப் பொறுப்பாக உதவிப் பொலிஸ் அத்தியட்சர் அஜித் விக்கிரமசேகர செப்டம்பர் முதலாம் திகதியிலிருந்து நியமிக்கப்பட்டுள்ளார்.

இதேவேளை இங்கு கடமையாற்றிய என்.எஸ்.பெரேரா லாகுகலை அதிரடிப் படை முகாமிற்கு இடமாற்றலாகிச் செல்கின்றனர்.

மட்டக்களப்பு மாவட்டத்தில் ஆரையம்பதி வரையான பிரதேசத்தின் அதிரடிப்படைக்குப் பொறுப்பாக சரத் பெரேரா உதவிப் பொலிஸ் அத்தியட்சகராக நியமிக்கப்பட்டுள்ளார்.

## பயணிகளைக் கொண்டே வவுனியாவில் சோதனை

வடபகுதியிலிருந்து செல்லும் பயணிகளை சோதனையிட சகபயணிகளையே வவுனியாவிலுள்ள தமிழ் தேச விரோதக் குழு ஒன்று பயன்படுத்துகின்றது.

நேற்று முன்தினம் வடபகுதியிலிருந்து சென்ற பயணிகளை நெளுக்குளம் இராணுவக் காவலரணுக்கு அண்மையில் தமிழ் குழு ஒன்று தடுத்து வைத்து கொழும்பிலிருந்து வந்தவர்களில் ஐந்து பேரை பிரட்டி அழைத்து வந்து மேற்படி பயணிகளை சோதனையிடுமாறு பணித்தனராம்.

இவர்கள் ஐவரும் அச்சம் காரணமாக வடபகுதிக்கு வெளியே சென்ற பயணிகளை சோதனையிட்டதாக அங்கிருந்து வரும் செய்திகள் தெரிவிக்கின்றன.

## கிளாலி-பூநகரி படகுச்சேவை

கிளாலி-பூநகரி படகுச் சேவை இன்றுவழமையான நேரத்திற்கு நடைபெறும் என அரசியல் துறையினர் அறிவித்துள்ளனர்.

## வடமராட்சி கடலில் மீனவர் மீது கடற்படை பீரங்கித் தாக்குதல்

(வடமராட்சி)

வடமராட்சி கடற்பரப்பில் சிறிலங்கா கடற்படையினர் அகோர பீரங்கித் தாக்குதலை மேற்கொண்டதில் மீனவர்களது தொழில் நேற்று முழுமையாக பாதிக்கப்பட்டது.

நேற்றுக் காலை 7 10 மணியளவில் இரண்டு படகுகளில் வந்த கடற்படையினரும், பகல் 10.00 மணியளவில் மற்றொரு படகில் வந்த கடற்படையினரும் மாறி மாறித் தாக்குதல் செய்தனர். கடலில் நின்ற மீனவர்கள் பொருள்களை இழந்தநிலையில்கடலில் குதித்து கரை சேர்ந்தனர். இன்பருட்டி, சக்கோட்டை, பொலிகண்டி, வல்வெட்டித் துறை ஊறாக கடற்படையினரின் மூர்க்கத் தாக்குதல்கள் நடைபெற்றன.

காங்கேசன்துறையிலிருந்து பருத்தித்துறை நோக்கி காலை வந்துகொண்டிருந்த 'குமாரி' கப்பலை கடற்படையினர் கடலில் இடைநிறுத்தி வைத்து மீனவர்கள் மீது தாக்குதல்களை மேற்கொண்டதாக மீனவர்கள் தெரிவித்தனர். (வோ)

## கடற்படை படகுகளின் நடமாட்டத்தில் மாற்றம்

(வடமராட்சி)

வடமராட்சிக் கடற்பரப்பில் சிறிலங்கா கடற்படையினரின் 'டோறா' படகு தகர்க்கப்பட்டதையடுத்து கடற்படையினரின் ரோந்து நடவடிக்கைகளில் மாற்றங்கள் காணப்படுவதை அவதானிக்க முடிகிறது.

இரவு பகல் ரோந்துச்சேவைகளைச் செய்துவரும் கடற் (4ஆம் பக்கம் பார்க்க)

## நீதிமன்றம் திறப்பு

யாழ்ப்பாணம்

தமிழீழத்தின் மூன்றாவது நீதிமன்றம் இன்று காலை பருத்தித்துறையில் திறந்து வைக்கப்படும் என நீதி நிர்வாகத்துறை அறிவித்துள்ளது. (வோ)

## தமிழீழ கல்வி

## போர் முனைக்குச் செல்லாத புத்திசாலி ஜெனரல்கள்

### சிறிலங்கா ஜெனரல்கள் குறித்து கிண்டல்

போர்முனையில் ஈடுபடாத புத்திசாலித் தனமான சில ஜெனரல்களும்சிறிலங்கா இராணுவத்தில் உள்ளனர் என கொழும்பில் இருந்து வெளியாகும் ஐலண்ட் ஆங்கில இத

அதில் அவர் மேலும் தெரிவிக்கையில் பாக்நீரிணைப் பகுதியில் கண்காணிப்புக்கு மிகவும் பொருத்தமான கேந்திர இடத்தில் அமைந்திருந்த இக்கோட்டை முகாம் உள்

கூறப்படுவது மிகவும் மடைத்தனமானதாகும் கோட்டை முகாமைக் கைவிட்டு பின்னர் மீனப் பிடிக்கலாம் என்று இராணுவத்தின் உயர் பீடத்தினர் சிலர் தெரிவித்த கருத்

# கடற்படை பீரங்கித் தாக்குதல்

(வடமராட்சி)

வடமராட்சி கடற்பரப்பில் சிறிலங்கா கடற்படையினர் அகோர பீரங்கித் தாக்குதலை மேற்கொண்டதில் மீனவர்களது தொழில் நேற்று முழுமையாக பாதிக்கப்பட்டது.

நேற்றுக் காலை 7 10 மணியளவில் இரண்டு படகுகளில் வந்த கடற்படையினரும், பகல் 10.00 மணியளவில் மற்றொரு படகில் வந்த கடற்படையினரும் மாறி மாறித் தாக்குதல் செய்தனர். கடலில் நின்ற மீனவர்கள் பொருள்களை இழந்தநிலையில் கடலில் குதித்து கரைசேர்ந்தனர். இன்பருட்டி, சக்கோட்டை, பொலிகண்டி, வல்வெட்டித்துறை ஈறாக கடற்படையினரின் மூர்க்கத் தாக்குதல்கள் நடைபெற்றன.

காங்கேசன்துறையிலிருந்து பருத்தித்துறை நோக்கி காலை வந்துகொண்டிருந்த 'குமாரி' கப்பலை கடற்படையினர் கடலில் இடைநிறுத்தி வைத்து மீனவர்கள் மீது தாக்குதல்களை மேற்கொண்டதாக மீனவர்கள் தெரிவித்தனர். (யோ)

## கடற்படை படகுகளின் நடமாட்டத்தில் மாற்றம்

(வடமராட்சி)

வடமராட்சிக் கடற்பரப்பில் சிறிலங்கா கடற்படையினரின் 'டோறா' படகு தாக்கப்பட்டதையடுத்து கடற்படையினரின் ரோந்து நடவடிக்கைகளில் மாற்றங்கள் காணப்படுவதை அவதானிக்க முடிகிறது.

இரவு பகல் ரோந்துச்சேவைகளைச் செய்துவரும் கடற்

(4ஆம் பக்கம் பார்க்க)

# குண்டு வீசிய புக்காரா அளம்பிலில் விரட்டியடிப்பு

(மணலாறு)

நேற்றுமுன்தினம் அளம்பில் பகுதியில் நடைபெற்ற இதயபூமி- I வெற்றிவிழாவை குழப்பும் நோக்கில் வந்த இரு புக்காரா விமானங்கள் இப் பகுதியில் குண்டு வீச்சை நடத்தின. எனினும் விடுதலைப் புலிகள் விமானங்கள் மீது தாக்குதல் நடத்தி அவற்றை விரட்டியடித்தனர்.

அன்று மாலை 3 00மணிக்கு அப்பகுதிக்குவந்தவிமானங்கள் மூன்று குண்டுகளை வீசின. மீண்டும் இரவு 9 30 மணிக்கு அங்கு வந்த விமானங்கள் இரு குண்டுகளைவீசின. இவ் விமானங்கள் மீது விடுதலைப் புலிகள் 50 கலிபர் தாக்குதலை மேற்கொண்டனர். துணைப்படை வீரர்களும் தாக்குதலை மேற்கொண்டனர். இதனை அடுத்து விமானங்கள்திரும்பிச் சென்றுவிட்டன.

# அளம்பிலில் நடைபெற்ற இதயபூமி - 1 வெற்றிவிழா

## மாவீரர் பெற்றோர் கௌரவிப்பு

(மணலாறு)

மண்கிண்டிமலை முகாம் தகர்ப்பு இதயபூமி - I நடவடிக்கையின் 45ஆம் நாள் வெற்றி விழா நேற்றுமுன்தினம் மணலாறு கோட்டத்தில் அளம்பிலில் கொண்டாடப்பட்டது. இந்நிகழ்வில் பெருமளவிலான மக்கள் திரண்டிருந்தனர்.

மங்கல விளக்கை முன்னாள் மணலாறு மாவட்ட அரசியல் துறைபொறுப்பாளர் ரமேஸ் அப்பா ஏற்றிவைத்தார். முல்லைமாவட்ட தளபதி சாலமன் தேசியக் கொடியை ஏற்றி வைத்தார். தொடர்ந்து மாவட்ட சிறப்புத் தளபதி பாண்டியன் நினைவுத் தூபியை திறந்து வைக்க நடுகைக் கல்லினை தமிழீழ துணை அரசியல் பொறுப்பாளர் கரிகாலன் திரை நீக்கம் செய்து வைத்தார். நினைவுத் தூபியின் திரைநீக்கத்தை மாவட்ட துணைப் படைப் பொறுப்பாளர் அமுதன் செய்தார். தொடர்ந்து மாவீரர்களின் உருவப்படங்களுக்கு வன்னி மாவட்ட அரசியல்துறை பொறுப்பாளர் மனோ, மன்னார் மாவட்ட அரசியல்துறை பொறுப்பாளர் கணேஸ், முல்லைமாவட்ட பொது மேம்பாட்டுக்கழக பொறுப்பாளர் புவியரசன், முல்லை மாவட்ட கடற்புலிகள் பொறுப்பாளர் மற்றும் மகளிர் படை பிரிவைச்சேர்ந்த செல்வி நம்பியா ஆகியோர் ஈகைச்சுடர் ஏற்றி மலர்மாலை அணிவித்தனர்.

இந்நிகழ்வில் வீரச்சாவு அடைந்த மாவீரர்களின் பெற்றோர் நினைவுப் பொருள்கள் வழங்கப்பட்டு கௌரவிக்கப்பட்டனர். அத்துடன் மணலாறு விஜயன் எழுதிய இதயபூமி - I என்ற வெளியீட்டுப் பிரதியை மாவட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் வாகீசனிடமிருந்து வன்னிமாவட்ட அரசியல்துறை பொறுப்பாளர் மனோ அவர்கள் பெற்றுக்கொண்டார்.

அஞ்சலிக் கூட்டத்தில் வீரச்சாவு அடைந்த லெப். திருமலைநம்பியின் தந்தை வரப்பிரகாசம், தமிழீழ அரசியல் துறை துணைப்பொறுப்பாளர் கரிகாலன், மணலாறு விஜயன், மாவட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் வாகீசன் ஆகியோர் உரையாற்றினர்.

## போரின் உண்மைநிலையை வெளியிட வேண்டும்

### - விக்கிரமபாகு கருணாரட்ன

(கொழும்பு)

இலங்கையில் நடைபெறும் உள்நாட்டு போரின் உண்மை நிலையை பத்திரிகைகள் வெளியிட வேண்டும். அரசு தமிழர்களின் பிரச்சினையை பயங்கரவாத பிரச்சினை என மீண்டும் மீண்டும் கூறி உண்மையை மறைத்து வருகிறது. பத்திரிகைகள் உண்மை நிலையை உணர்ந்து செயற்பட வேண்டும் என நவசமசமாஜக் கட்சி செயலர் கலா

(4ஆம் பக்கம் பார்க்க)

... ஒன்று திரண்டால் மட்டுமே பலவீனப்படுத்த முடியும் என்றும் கூறினார்.

மணலாறில் இராணுவ முகாமை விடுதலைப் புலிகள் தாக்கி பலஇராணுவத்தினரை கொன்றதுடன் பெருமளவு ஆயுதங்களை காடுகளுக்கூடாக கொண்டு செல்லும்வரை கை

## நீதி மன்றம் திறப்பு

யாழ்ப்பாணம்

தமிழீழத்தின் மூன்றாவது நீதிமன்றம் இன்று காலை பருத்தித்துறையில் திறந்து வைக்கப்படும் என நீதி நிர்வாகத்துறை அறிவித்துள்ளது. (யோ)

## தமிழீழ கல்வி தேர்வு

தமிழீழக் கல்வி மேம்பாட்டுப் பேரவையினால் ஆண்டுதோறும் நடத்தப்படும் தமிழீழப் பொதுக் கல்வித் தேர்வு இந்தஆண்டு (1993) திட்டமிட்டபடி செப்டெம்பர்மாதம் 28 ஆம் திகதி தொடக்கம் ஒக்டோபர்மாதம் 4 ஆம் திகதி வரை நடைபெறுமெனவும், பாடசாலைகளுக்கு அனுமதி அட்டைகளும் நேர அட்டவணைகளும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன எனவும், நேர அட்டவணைப்படி 5 ஆம் திகதி நடைபெறவிருந்த பாடங்கள் 3ஆம்திகதி ஞாயிற்றுக் கிழமை நடைபெறுமெனவும் தேர்வு ஆணையாளர் தெரிவித்துள்ளார்.

## பாடசாலை அதிபரை அறையில்வைத்துப்பூட்டினர்

[வவுனியா]

பாடசாலை அதிபர் ஒருவர் ஆத்திரம்கொண்ட மாணவர்களால் அவரது அலுவலக அறைக்குள்ளேயே வைத்துப் பூட்டப்பட்டார்.

வவுனியா தமிழ் மகாவித்தியாலயத்தில் அண்மையில் நடந்தமேற்படிசம்பவத்தின்போது பாடசாலையின் கண்ணாடி சன்னல்கள் உடைக்கப்பட்டதோடு, தொலைபேசித்தொடர்புகளும் துண்டிக்கப்பட்டன.

பொலிசாரிடம் முறைப்பாடு செய்யப்பட்டதை தொடர்ந்து ஸ்தலத்திற்கு விரைந்த பொலிசார் இரு மாணவர்களைக் கைது செய்து சென்றனராயினும், மாணவர்கள் அனைவரும் திரண்டு பொலிஸ்நிலையத்தை முற்றுகையிட்டதைத் தொடர்ந்து கைதானோர் விடுவிக்கப்பட்டனர். இச் சம்பவங்கள் அனைத்தையும் ஆசிரியர்கள் வேடிக்கை பார்த்துக்கொண்டு நின்றனராம்.

இவ்வளவு களேபரத்துக்கும்

(4ஆம் பக்கம் பார்க்க)

## இம்மாத ஒய்வூதியத்துடன் 260 ரூபா மேலதிகப்படி

அரசினால் அறிவிக்கப்பட்ட வாழ்க்கை செலவுப் படியான 260 ரூபா அலவன்ஸ் கொடுப்பனவு இம்மாதம் ஒய்வூதியத்துடன் கிடைக்கவுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது யாழ். செயலக ஓய்வூதியப்பிரிவு வட்டாரங்களிலிருந்து இத்தகவல் தெரியவந்தது இது தொடர்பான சுற்றுநிருபம் கிடைப்பதில் ஏற்பட்ட தாமதம் காரணமாகவே இக்கொடுப்பனவும் தாமதமானதாக தெரிவிக்கப்படுகிறது.

கடந்த ஜூன் மாதம் முதல் அறிவிக்கப்பட்ட அலவன்ஸ் நிலுவையுடன் செப்டம்பர் மாத ஒய்வூதியத்துடன் வழங்கப்படும் எனத் தெரிவிக்கப்படுகிறது (24)

... ராக இல்லை.

இம்முகாம் மிகவும் பாதுகாப்பாக அமைக்கப்பட்டிருந்த ஒரு முகாம். இதனையே விடுதலைப் புலிகள் முப்பது நிமி ... யும் எடுத்துச் சென்றுள்ள சம்பவமானது எவராலும் கற்பனை செய்து கூடப்பார்க்க முடியாத ஒன்றாகும்.

எனவேதான் இதுபோன்ற ... பதை உறுதிப்படுத்திக் கொள்வதற்காகவே நாட்டு மக்கள் அனைவரும் ஒன்றுபட்டு செயல்பட வேண்டும் என தான் அழைப்பு விடுத்ததாக அவர் தெரிவித்தார்.

# போர் முனைக்குச் செல்லாத புத்திசாலி ஜெனரல்கள்

## சிறிலங்கா ஜெனரல்கள் குறித்து கிண்டல்

போர்முனையில் ஈடுபடாத புத்திசாலித் தனமான சில ஜெனரல்களும்சிறிலங்கா இராணுவத்தில் உள்ளனர் என கொழும்பில் இருந்து வெளியாகும் ஐலண்ட் ஆங்கில இதழில் அரசியல் விமர்சகர் ஒருவர் தான் எழுதிய கட்டுரையில் கிண்டலடித்துள்ளார்.

விமர்சகர் தனது கட்டுரையில் போர் முனையில் ஈடுபடாத புத்திசாலிகளான சில ஜெனரல்கள் கட்டைக்காடு, வெற்றிலைக்கேணி இராணுவ முகாம்களை மீளப்பெறுமாறு கூறிய ஆலோசனையை பாதுகாப்பு கவுன்சில் ஏற்காமல் விட்டமை பாராட்டக் கூடியதாகும் எனக்குறிப்பிட்டுள்ளார்.

யாழ்ப்பாணக் கோட்டையைக் கைவிடுவதாக இராணுவம் எடுத்த முடிவு மிகப்பெரிய தவறாகப் போய்விட்டது எனவும் அவர் அதில் தெரிவித்துள்ளார்.

அதில் அவர் மேலும் தெரிவிக்கையில் பாக்நீரிணைப் பகுதியில் கண்காணிப்புக்கு மிகவும் பொருத்தமான கேந்திர இடத்தில் அமைந்திருந்த இக்கோட்டை முகாம் உள்ளும் புறமும் மிகவும் பாதுகாப்பானதாகும். ஒவ்வொரு முறையும் அங்கு புலிக்கொடி ஏற்றப்படும் போது விமானப் படை குண்டு வீசுவதாகக் கூறப்படுவது மிகவும் மடைத்தனமானதாகும் கோட்டை முகாமைக் கைவிட்டு பின்னர் மீளப் பிடிக்கலாம் என்று இராணுவத்தின் உயர் பீடத்தினர் சிலர் தெரிவித்த கருத்தின் செல்வாக்கிற்கு அரசியல் தலைமைப்பீடம் உட்பட்டு விட்டமை பெரும் துரதிர்ஷ்டமானதாகும் என்றும் குறிப்பிட்டுள்ளார்.

## மாவுடன் வாதுவ நாளை வந்துசேரும்?

[வடமராட்சி]

திருகோணமலை துறைமுகத்தில் மாவு ஏற்றிக்கொண்டிருக்கும் 'வாதுவ' கப்பல் நாளை வெள்ளிக்கிழமைவந்து சேருமெனத் தெரிவிக்கப்படுகிறது.

பருத்தித்துறை துறைமுகத்தில் பொருள்களை இறக்கிக் கொண்டிருக்கும் 'குமாரி' கப்பல் எதிர்வரும் ஞாயிற்றுக் கிழமை கொழும்பு நோக்கிப் புறப்படும்.

கொழும்பு துறைமுகத்தில் பொருள்களை ஏற்றிக்கொண்டிருக்கும் 'குமண' கப்பல் எதிர்வரும் 16ஆம் திகதி பருத்தித்துறை நோக்கி வரும்.

## தமிழ் கைதிகள் மீதான விசாரணை ஆரம்பமாம்

(கொழும்பு)

ஜே.வி.பி. சந்தேக நபர்கள் மீதான விசாரணை முடிவடைந்துள்ளதைத் தொடர்ந்து தற்போது வடக்கு கிழக்கு கைதிகள் மீதான விசாரணைகள் ஆரம்பமாகியுள்ளதாக பாதுகாப்பு அமைச்சு அறிவித்துள்ளது.

கடந்த காலங்களில் தென்னிலங்கை சிறைகளில் பலஆயிரக் கணக்கான தமிழ் இளைஞர்கள் விசாரணைகள் எதுவுமின்றிப் பல வருடங்களாகத் தடுத்து வைக்கப்பட்டுள்ளமை தெரிந்ததே.

முப்படைகளாலும் பரவலாகக் கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டுள்ள தமிழ் இளைஞர்களில் 849 பேர் மீதான விசாரணைகளையே சிறிலங்கா பாதுகாப்பு அமைச்சு தற்போது ஆரம்பித்துள்ளதாம்.

## யாழ். வந்த ஐ. நா. அதிகாரி பல பகுதிகளுக்கும் விஜயம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்துக்கான உத்தியோக பூர்வ விஜயமொன்றை மேற்கொண்டு வந்து தற்பொழுது யாழ்ப்பாணத்தில் தங்கியிருக்கும் ஐ.நா அபிவிருத்தித் திட்ட ஆலோசகர் திரு. மல்கம் றிட்அவுட் குடாநாட்டின் பலபகுதிகளுக்கும் சென்று இங்குள்ள நிலைமைகளை நேரடியாக அவதானித்து வருகிறார்.

கிளாலிக் கடற்கரையையும் மற்றும் குடாநாட்டில் உள்ள அகதி முகாம்களில் தங்கியிருக்

(4ஆம் பக்கம் பார்க்க)

# வரி விளம்பரம்

### தவறிவிட்டது

715471531V என்ற அடையாள அட்டை இன்னும் முக்கிய பொருள்களுடன் சிறிய கறுப்பு பேக் நவீன சந்தைப் பகுதியில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தயவு செய்து ஈழநாதம் பணிமனையில் ஒப்படைக்கவும். றோஸ்மேரி மைக்கல் 43A, மொறிஸ்வீதி, சொய்யாத்தோட்டம் யாழ்ப்பாணம். (5924)

### ஆடைத்தொழிற்சாலை மூடப்பட்டது

(கொழும்பு)

பேருவளையில் உள்ள ஆடைத்தொழிற்சாலை ஒன்று மூடப்பட்டதை அடுத்து 395 தொழிலாளர் தொழிலை இழந்துள்ளனர்.

200 ஆடைத்தொழிற்சாலைகள் திட்டத்தில் இதுவும் ஒன்றாகும். கடந்த வியாழனன்று 395 தொழிலாளர்களும் ஆடைத்தொழிற்சாலையை விட்டு வெளியேற்றப்பட்டதாகத் தெரியவருகிறது.

### தமிழீழ பொதுக்கல்வித் தேர்வு

இவ்வாண்டுக்கான தமிழீழ பொதுக் கல்வித் தேர்வு திட்டமிட்டபடி செப்டம்பர் 28ஆம் திகதி ஆரம்பமாகி அக்டோபர் 4-ம் திகதி வரை தொடர்ந்து நடைபெறுமென தேர்வு ஆணையாளர் அறிவித்துள்ளார்.

### குடும்பநல உதவியாளர் பயிற்சி நெறி ஆரம்பம்

யாழ்ப்பாண மாநகர சபையின் சுகாதாரப் பகுதியினர் குடும்பநல உதவியாளர்களுக்கான பயிற்சி நெறி ஒன்றை ஆரம்பித்துள்ளனர். தேசிய பயிலுநர் சபையுடன் இணைந்து மேற்கொள்ளப்படும் இப் பயிற்சி நெறியினால் மாநகர சபைப் பகுதியில் வெளிக்கள ஊழியர் பற்றாக்குறை ஓரளவுக்கு நீங்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

### கருப்பூனைகள்

[கொழும்பு]

பதினைந்து நாவல்களின் ஆசிரியரான நிகால் பி. ஜெயதுங்கா 'களு பளாலு' (கரும்பூனைகள்) என்ற நாவலை வெளியிட்டுள்ளார்.

தென் இலங்கையின் அண்

---

உ

சிவமயம்

யாழ். இந்து மகளிர் கல்லூரி

## பரிசளிப்பு விழா

காலம்: 10 09.93 வெள்ளிக்கிழமை காலை 9 00 மணி

இடம்: விசாலாட்சி மண்டபம்

பிரதம விருந்தினர்

பேராசிரியர் கலாநிதி பொ. பாலசுந்தரம்பிள்ளை

பதில் துணைவேந்தர் / கலைப்பீடாதிபதி - யாழ். பல்கலைக் கழகம்

சிறப்பு விருந்தினர்:

வெ. இளங்குமரன் பொறுப்பாளர், கல்வி மேம்பாட்டுக் கழகம்

பரிசில் வழங்குபவர்

திருமதி இராசலட்சுமி பாலசுந்தரம்பிள்ளை

பெற்றோர், நலன் விரும்பிகள், பாடசாலை அபிவிருத்திச் சங்கத்தினர், பழைய மாணவர் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

அதிபர், ஆசிரியர், மாணவர்கள், பொன் விழாச் சபையினர்.

(சி/7374)

---

யாழ். இந்து மகளிர் கல்லூரி

பொன் விழா ஆண்டின்

## கலை விழா

—இரண்டாம் நாள்—

பழைய மாணவிகள் வழங்கும் நிகழ்வுகள்

காலம்: 10-09-93 வெள்ளிக்கிழமை மாலை 4. 30 மணி

இடம்:- கல்லூரி திறந்த வெளி அரங்கு

தலைவர்:- செல்வி புஷ்பா செல்வநாயகம்
தலைவர், பழைய மாணவிகள் சங்கம்
யாழ் இந்து மகளிர் கல்லூரி.

பிரதம விருந்தினர்:- திரு. சி. வேலாயுதம்
பிரதிக் கல்விப் பணிப்பாளர்.
யாழ் கல்விக் கோட்டம்.

சிறப்பு விருந்தினர்கள்:- திரு. ஆ மகாலிங்கம்
மேலதிக அரச அதிபர், நல்லூர்.
திரு. இதயன்
பொறுப்பாளர் மாணவர் அமைப்பு
யாழ். கோட்டம்.

நிகழ்ச்சி நிரல்

| | |
|---|---|
| 5-00_5 15 | புஷ்பாஞ்சலி |
| 5.20–6.05 | கொழும்பில் கல்யாணம் (நாடகம்) ஆக்கம்: அராலியூர் சுந்தரம்பிள்ளை |
| 6 10–6 30 | தனி நடனம் |
| 6 35_7 05 | பல்லியம் |
| 7 10_7 40 | குழு நடனம் |
| 7-45_8 00 | தனி நடனம் |
| 8 05_8-45 | இனியொரு விதிசெய்வோம் (கவிதா நிகழ்வு) |

நன்றியுரை: திருமதி ம. பரமநாதன்
செயலாளர், பழைய மாணவிகள் சங்கம்

மாணவர்கள், ஆசிரியர்கள், பெற்றோர், நலன்விரும்பிகள், பழைய மாணவர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

பொன்விழாச் சபையினர்

விளம்பர அனுசரிப்பு:-

---

## வவு. விவசாயக் கல்லூரியில் போதனைகள் ஆரம்பம்

[வவுனியா]

வவுனியா விவசாயக் கல்லூரி 93-94 இருவருட காலம் டிப்ளோமா பயிற்சி நெறி இம்மாதம் 15ஆம் திகதி ஆரம்பிக்கப்படவுள்ளது.

தபால் சேவை சீர்கேடுகள் காரணமாக உரிய காலத்தில் கடிதம் கிடைக்காதவர்களும் கூட அவ்வப் பகுதி மாவட்ட விவசாய விஸ்தரிப்பு காரியாலயங்களில் உதவி விவசாயப் பணிப்பாளர்களுடன் தொடர்பு கொண்டு தமது தெரிவை உறுதிப்படுத்திக் கொள்ளலாம்.

உரிய காலத்தில் சமுகமளிக்காத விடத்தில் தெரிவானவர்களின் இடத்திற்கு புதியவர்களைச் சேர்த்துக் கொள்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்று விவசாயக் கல்லூரி நிர்வாகம் அறிவித்துள்ளது.

---

## பாராட்டுகிறேன்

யாணைஷயூரில் மேடையேறிய சம்பூரண அரிச்சந்திரா நாட்டுக் கூத்தைப்பார்த்தேன், ரசித்தேன், பண்பான பாடல்கள். லோகிதாசனாக நடித்த பத்து வயதுச் சிறுவனின் சாகசமும் சந்திரமதியின் நடிப்பும்படிப்பும் பிரமாதம்; வியக்கத்தக்கது.

(5919) திரு. மோகனராஜ் யாழ்ப்பாணம்

---

## 4-ம் ஆண்டு அகவை நினைவு



மலர்வு: 29-5-1976

வீரச்சாவு: 10-9-1990

### வீரவேங்கை ரவாஸ்

(ஜெசுரத்தினம் புனிதராசா)

சென். யேம்ஸ் வீதி, வசாவிளான்.

வீட்டை, உறவை மறந்தாய் - தாய்
நாட்டைக் காக்கும் பணியில் இணைந்தாய் - யாழ்
கோட்டைச் சமரில் இன்னுயிர் ஈந்தாய் - அழியா
ஏட்டில் பதிந்த மாவீரனானாய்.

பாரத படையினை சிங்களப் படையோடு
"போரிட போராளி போதாதெனச் சொன்னாய்"
"வெற்றி இன்றேல் வீர மரணமென்றாய்"
சொல்லிவிட்டுச் சென்ற வெற்றிச் சமரினிலே
வீர மரணத்தை தழுவிய "புனிதனே" - உன்னை
ஆரத் தழுவுகின்றோம் - நீ
என்று மெங்கள் கண்ணொளியில் ... ... ...

இன்று 9-09-93 கோப்பாய் மரியன்னை ஆலயத்தில் மாலை 5.00 மணிக்கு இரங்கற் திருப்பலி ஒப்புக் கொடுக்கப்படும்.

– குடும்பத்தினர்.

கோப்பாய் தெற்கு,
கோப்பாய் (5912)

21 ம் நாள் நினைவஞ்சலி

---

## நினைவு கூருகின்றோம் ...

## 1993-09-09

1984ஆம் ஆண்டு இதே தினத்தில் காரைநகர், பொன்னாலைப் பகுதியில் இனங்காணப்படாத நிலையில் மேற்கொள்ளப்பட்ட துப்பாக்கிச் சூட்டில் எமைப் பிரிந்த -

★ **ஜெகன்/நிசாம்** (நடராசா ஜெகதீசன் - சங்கரத்தை, வட்டுக்கோட்டை - யாழ்)

யாழ் - கரவெட்டிப் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினரால் சுட்டுக் கொல்லப்பட்ட பொதுமகன்.

1985ஆம் ஆண்டு மட்டுநகர் - புகையிரத நிலைய வீதியில் சிறிலங்கா அதிரடிப் படையினர் மேற்கொண்ட திடீர்சோதனையின்போது சயனைட் உட்கொண்டு வீரச்சாவெய்திய -

**பிரதீஸ்** (சின்னத்துரை ரகு - ஆரையம்பதி - மட்டு)

**பிரியன்** (தம்பிப்பிள்ளை நவரட்ணராஜா - ஆரையம்பதி-03 - மட்டு)

மட்டு - சத்துருக்கொண்டான் பகுதியில் சிறிலங்கா சிறப்பு அதிரடிப் படையினர் பதுங்கியிருந்து மேற்கொண்ட தாக்குதலில் வீரச்சாவெய்திய -

**ஜோன்** (ராஜா ஜோன் கெனடி - இருதயபுரம் - மட்டு)

**பெரியபேணாட்** (குருசுமுத்து துரைசிங்கம் - நாகர் கோவில் மேற்கு - வடமராட்சி கிழக்கு)

1987ஆம் ஆண்டு அம்பாறை - தாண்டியடிப் பகுதியில் எதிர்பாராத விதமாக ஏற்பட்ட துப்பாக்கிச் சூட்டில் எமைப் பிரிந்த -

**சீருபா** (பொன்னையா சிறிதரன் - அக்கரைப்பற்று-08 - அம்பாறை)

1989ஆம் ஆண்டு வவுனியா - அனந்தர் புளியங்குளம் பகுதியில் இந்தியப் படையினர் பதுங்கியிருந்து மேற்கொண்ட தாக்குதலில் வீரச்சாவெய்திய -

**சுதன்** (வேலாயுதம் சுரேந்திரன் - சேமமடு, ஓமந்தை - வவுனியா)

**மணியம்** (சின்னையா தேவதாசன் - புதுக்குளம், ஓமந்தை - வவுனியா)

இதே சம்பவத்தின்போது இந்தியப் படையினரால் சுட்டுக் கொல்லப்பட்ட தமிழ்ச் சிறுவன்.

1990ஆம் ஆண்டு முல்லைத்தீவில் சிறிலங்கா இராணுவத்தினருக்கெதிரான நடவடிக்கைகளில் ஈடுபட்டுக் கொண்டிருந்தபோது எதிர்பாராத விதமாகப் பொறிவெடி வெடித்ததில் சயனைட் உட்கொண்டு வீரச்சாவெய்திய -

**ஜெயபால்** (முத்துலிங்கம் சுதா - ஐயங்கேணி, ஏறாவூர் - மட்டு)

மட்டுநகரில் சிறிலங்கா இராணுவத்தினரால் சுட்டுக் கொல்லப்பட்ட ஏறாவூர் தளவாயைச் சேர்ந்த தமிழ்ப் பொதுமகன். புல்லுமலைப் பகுதியில் சிறிலங்கா படையினரால் கைது செய்யப்பட்டு சுட்டுக் கொல்லப்பட்ட 03 தமிழர்கள். முறக்கொட்டாஞ்சேனைப் பகுதியில் கைது செய்யப்பட்டு படுகொலை செய்யப்பட்ட வாழைச்சேனை, புதுக்குடியிருப்பைச் சேர்ந்த தமிழ்ப் பொதுமகன். பிள்ளையாரடி, கொக்குவில் சத்துருக்கொண்டான் பகுதிகளில் சிறிலங்காப் படையினர் மற்றும் முஸ்லிம் ஊர்காவற் படையினரால் சுட்டும், வெட்டியும் படுகொலை செய்யப்பட்ட குழந்தைகள், பெண்கள் உட்பட 170 தமிழர்கள்.

தீவகத்தில் சிறிலங்காப்படையினரின் நடவடிக்கைகளின் போது படுகொலை செய்யப்பட்ட பட்டதாரியான வேலணை பொற்பகுதியைச் சேர்ந்த இளம்பெண்.

1991ஆம் ஆண்டு மணலாற்றில் சிறிலங்கா இராணுவத்தினருடனான சமரில் வீரச்சாவெய்திய.

**2-ம் லெப்.காயத்திரி** (இந்திராதேவி இரத்தினம் - 7-ம் குறிச்சி, அக்கரைப்பற்று-அம்பாறை)

**சாந்தினி** (ஜெயசோதிநாகலிங்கம்-தம்பிலுவில்-அம்பாறை)

பயிற்சி நெறி ஆரம்பம்

யாழ்ப்பாண மாநகர சபையின் சுகாதாரப் பகுதியினர் குடும்ப நல உதவியாளர்களுக்கான பயிற்சி நெறி ஒன்றை ஆரம்பித்துள்ளனர். தேசிய பயிலுநர் சபையுடன் இணைந்து மேற்கொள்ளப்படும் இப் பயிற்சி நெறியினால் மாநகர சபைப் பகுதியில் வெளிக்கள ஊழியர் பற்றாக்குறை ஓரளவுக்கு நீங்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

### கரும்பூனைகள்

(கொழும்பு)

பதினைந்து நாவல்களின் ஆசிரியரான நிகால் பி. ஜெயதுங்கா 'களு பளாலு' (கரும் பூனைகள்) என்ற நாவலை வெளியிட்டுள்ளார்.

தென் இலங்கையின் அண்மைக்கால அரசியல் தன்மைகளையும் கரும் பூனைகளின் தோற்றம் பற்றியும் இந்த நாவல் விபரிக்கின்றது. அமைதியற்ற அரசியல் பின்புலத்தில் மானிடத்தின் இழப்புகள் இந்த நூலில் இழையோடியுள்ளன.

---

பொறுப்பாளர் மாணவர் அமைப்பு
யாழ். கோட்டம்.

### நிகழ்ச்சி நிரல்

| | |
|---|---|
| 5-00_5 15 | புஷ்பாஞ்சலி |
| 5.20_6.05 | கொழும்பில் கல்யாணம் (நாடகம்) ஆக்கம்: அராலியூர் சுந்தரம்பிள்ளை |
| 6 10–6 30 | தனி நடனம் |
| 6 35_7 05 | பல்லியம் |
| 7 10_7 40 | குழு நடனம் |
| 7-45_8 00 | தனி நடனம் |
| 8 05_8-45 | இனியொரு விதிசெய்வோம் (கவிதா நிகழ்வு) |

நன்றியுரை: திருமதி ம. பரமநாதன்
செயலாளர், பழைய மாணவிகள் சங்கம்

மாணவர்கள், ஆசிரியர்கள், பெற்றோர், நலன்விரும்பிகள், பழைய மாணவர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

பொன்விழாச் சபையினர்

விளம்பர அன்பளிப்பு:-
பூபாலசிங்கம் புத்தகசாலை
யாழ்ப்பாணம் (சி-7375)

---

யோகு ரேடிங் கொம்பனி
332, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

---

வீட்டை, உறவை துறந்தாய் - தாய்
நாட்டைக் காக்கும் பணியில் இணைந்தாய் - யாழ்
கோட்டைச் சமரில் இன்னுயிர் ஈந்தாய் - அழியா
ஏட்டில் பதித்த மாவீரனானாய்.

பாரத படையினை சிங்களப் படையோடு
"போரிட போராளி போதாதெனச் சொன்னாய்"
"வெற்றி இன்றேல் வீர மரணமென்றாய்"
சொல்லிவிட்டுச் சென்ற வெற்றிச் சமரினிலே
வீர மரணத்தை தழுவிய "புனிதனே" - உன்னை
ஆரத் தழுவுகின்றோம் - நீ
என்றும் எங்கள் கண்ணெதிரில் ... ... ...

இன்று 9-09-93 கோப்பாய் மரியன்னை ஆலயத்தில் மாலை 5.00 மணிக்கு இரங்கற் திருப்பலி ஒப்புக் கொடுக்கப்படும்.

– குடும்பத்தினர்.

கோப்பாய் தெற்கு,
கோப்பாய் (5912)

---

## 31-ம் நாள் நினைவஞ்சலி



மலர்வு
21. 02. 1932

உதிர்வு
10. 08. 1993

அமரர்
### ஆழ்வாப்பிள்ளை சுப்பிரமணியம்
(நெல்லண்டை - பருத்தித்துறை)

திதி: 09. 09. 1993

இளர் காலஞ்சென்ற ஆழ்வாப்பிள்ளை இலட்சுமிப்பிள்ளையின் ஏகபுத்திரனும், மாவீரர் வைகுந்தவாசனின் (வின்சன்) தந்தையும், காலஞ்சென்ற இ. விஜிதாவின் பேரனும் ஆவார்.

"மாதமொன்று மறைந்தாலும் உங்கள்
மதிவதனம் எம் மனதை விட்டகலாது
ஆலமரமாயிருந்தீர்கள் - அதில் வாழும்
பறவைகளாய் நாமிருந்தோம்
கொடுங் காலனவன் சரிந்தான்
கதறி நாம் துடிக்கின்றோம்
பூவுலகு உள்ள வரை உங்கள்
புகழுடம்பு மறையாது."

தங்கள் ஆத்மா சாந்தியடைய
உளமார பிரார்த்தித்து நிற்கும்.

அன்பு மனைவி சு. பத்மாதேவி, பிள்ளைகள்- இராசலட்சுமி (இத்தாலி), ஆழ்வாப்பிள்ளை (இத்தாலி), விமலா, இராஜேஸ்வரி (இத்தாலி), யோகேஸ்வரி, கமலா, மருமகன் பொ. இராமச்சந்திரன் (இத்தாலி), பேரப்பிள்ளை இ சுகாசினி (இத்தாலி), உற்றார், உறவினர்கள்;

"இராசலட்சுமி வாசா"
நெல்லண்டை,
பருத்தித்துறை. (5909)

---

மட்டுநகரில் சிறிலங்கா இராணுவத்தினரால் சுட்டுக் கொல்லப்பட்ட ஏறாவூர் தளவாயைச் சேர்ந்த தமிழ்ப் பொதுமகன். புல்லுமலைப் பகுதியில் சிறிலங்கா படையினரால் கைது செய்யப்பட்டு சுட்டுக் கொல்லப்பட்ட 03 தமிழர்கள். முறக்கொட்டாஞ்சேனைப் பகுதியில் கைது செய்யப்பட்டு படுகொலை செய்யப்பட்ட வாழைச்சேனை, புதுக்குடியிருப்பைச் சேர்ந்த தமிழ்ப் பொதுமகன். பிள்ளையாரடி, சொறிக்கல்முனை, சத்துருக்கொண்டான் பகுதிகளில் சிறிலங்காப் படையினர் மற்றும் முஸ்லிம் ஊர்காவற் படையினரால் சுட்டும், வெட்டியும் படுகொலை செய்யப்பட்ட குழந்தைகள், பெண்கள் உட்பட 170 தமிழர்கள்.

தீவகத்தில் சிறிலங்காப்படையினரின் நடவடிக்கைகளின் போது படுகொலை செய்யப்பட்ட பட்டதாரியான வேலணை பொற்பகுதியைச் சேர்ந்த இளம்பெண்.

1991ஆம் ஆண்டு மணலாற்றில் சிறிலங்கா இராணுவத்தினருடனான சமரில் வீரச்சாவெய்திய.

2-ம் லெப். காயத்திரி (இந்திராதேவி இரத்தினம் - 7-ம் குறிச்சி, அக்கரைப்பற்று-அம்பாறை)

சாந்தினி (ஜெயசோதி நாகலிங்கம்-தம்பிலுவில்-அம்பாறை)

லெப. அரசன் (செல்லத்தம்பி பரமேஸ்வரன்-கிண்ணியடி, வாழைச்சேனை-மட்டு)

2-ம் லெப். மலைமகன் (வளர்மதி பிள்ளையான்-பாடசாலை வீதி, கிரான்-மட்டு)

செல்வரூபி (காளியம்மா பொன்னையா-பன்குடாவெளி-மட்டு)

கப்டன் கலையரசன்/மிதுலன் (குமாரசிங்கம் குணரஞ்சன் -செட்டிகுளப்புலவு-வவுனியா)

ஜொய்சி (வாசுகி காளிமுத்து - 7-ம் வாய்க்கால்—கிளிநொச்சி)

மேஜர் தண்டேஷ் (கனகநாயகம் குணேந்திரமோகன் -ஓடக்கரை-பருத்தித்துறை)

2-ம் லெப். சேரன் (இராசரத்தினம் ஜெயராஜ்-கும்பழாவளை, அளவெட்டி-யாழ்)

2-ம் லெப். நேசன் (சிவனேசன் சிவசங்கர்-மானிப்பாய் மேற்கு-யாழ்)

பிரவீனா (யசோதாதேவி செல்வநாயகம்-குமோலை, எழுதுமட்டுவாள்-யாழ்)

திலீப் (மார்க்கண்டு இளங்கீதன்-ஆவரங்கால், புத்தூர்-யாழ்)

வவுனியாவில் சிறிலங்கா இராணுவத்தினர் மீது மேற்கொள்ளப்பட்ட தாக்குதலின்போது ஏற்பட்ட சமரில் வீரச்சாவெய்திய,

லெப். அருட்செல்வன் பூட்டோ (கறுப்பையா சிவலோகநாதன்-கற்குளம்-வவுனியா)

லெப். வேங்கை/ராம்ராஜ் (மயில்வாகனம் தமிழ்ச்செல்வன்-பாவற்குளம்-வவுனியா)

1992ஆம் ஆண்டு திருமலை-குரங்குப் பாலம் சிறிலங்கா இராணுவ முகாமிற்கும், பாலம்போட்டாறு சிறிலங்கா இராணுவமுகாமிற்குமிடையில் அமைந்திருந்த காவலரண்கள் மீதான தாக்குதலில் வீரச்சாவெய்திய.

கப்டன் நந்தன் (வெள்ளைச்சாமி சுரேஸ்குமார்-சீனன்குடா-திருமலை)

லெப். வளவர்கோன்/நிருபன் (கந்தசாமி திருகேதீஸ்வரன்-ஆலங்கேணி-திருமலை)

2ம்-லெப் சூலாமணி/சம்பத் (சுப்பிரமணியம் விக்னேஸ்வரன்-நானாட்டான்மன்னார்)

ஆகியோரை இந்நாளில்
நினைவு கூருகின்றோம்.

★ இக்குறியிடப்பட்ட மாவீரர் ஈரோஸ் அமைப்பு இயங்கிய காலத்தில் அதனுடன் இணைந்து செயற்பட்டவராவர்.

**தமிழீழ விடுதலைப் புலிகள்.**

(சி/7376)

---

## தொழிற் பயிற்சிகள்

உள்நாட்டிலும், வெளிநாட்டிலும் எலக்ரோனிக் துறையில் தொழில் வாய்ப்பு பெறக்கூடிய முறையில் பயிற்சியளிக்கப்படுகின்றன.

**(1) ★ றேடியோ, ரெலிவிசன், வீடியோ டெக் றிப்பியறிங்**

சகல இன றேடியோ, ரெலிவிசன், வீடியோ டெக் தொழிற்படும் முறைகள் பழுதுகள் திருத்தப்படும் முறைகள் செய்முறைப் பயிற்சியுடன் பயிற்சியளிக்கப்படும்.

காலம்: 6 மாதம்

**(2) ★ றீவைன்டிங்**

டைனமோ, ரான்ஸ்போமர், மோட்டர் றீவைன்டிங் செய்தல் பயிற்சியளிக்கப்படும்.

காலம்: 5 மாதம்

**(3) ★ மோட்ட சைக்கிள் மெக்கானிசம்**

நீர் இறைக்கும் இயந்திரம், மோட்ட சைக்கிள் திருத்தப்படும் முறைகள் விளக்கமாக பயிற்சியளிக்கப்படும்.

காலம்: 4 மாதம்

**(4) ✶ "Special English Class"**

**2ஆவது பிரிவு ஆரம்பம்: 15-09-93 (கிழமை நாட்கள்)**

விபரங்களிற்கு:

JAFFNA TECHNICAL INSTITUTE JTI SRILANKA

**Jaffna Technical Institute**

ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.
(றெயில்வே கடவை அருகாமை - மேமாடி) (சி-7377)

### சிந்தனைக்கு

எல்லாமே முன்பு எப்பொழுதாவது எண்ணப்பட்டது தான்; அதை மீண்டும் எண்ணாமல் போவதில் தான் பிரச்சினை எழுகிறது.

–யொஹன் கேதெ

ஈழநாதம்

31, மகேந்திரா வீதி, யாழ்ப்பாணம் 09-09-1998
தொலைபேசி
ஆசிரியபீடம் 025-2839 நிர்வாகபீடம் 2028
த. பெ. எண்-05

## ஆயுதப்படையும் நவீனமயமாக்கலும்

கடற்பரப்பில், விடுதலைப் புலிகளின் தாக்குதல்கள் அதிகரித்துள்ள நிலையில், கடற்படையின் பலத்தை அதிகரிக்க வேண்டும் என்ற பலமான பேச்சு சிறிலங்கா பாதுகாப்பு வட்டாரங்களில் பெரிதாகப் பேசப்படுகின்றது. இதேவேளை, சிறிலங்கா கடற்படை கடற்புலிகளிடம் இருந்து சவாலை எதிர்நோக்குவதனால், கரையோர இராணுவ முகாம்கள் நெருக்கடிகளை எதிர்நோக்க வேண்டிய நிலையில் உள்ளன என சிங்கள இராணுவ விமர்சகர் ஒருவர் எச்சரிக்கின்றார்.

இவை இரண்டும் வெளிக்காட்டுவது ஒன்றையே. அதாவது, சிறிலங்கா கடற்படை உடனடியாக விரிவாக்கப்பட வேண்டும். நவீன கடற்படைத் தளபாடங்கள் போரில் அறிமுகப்படுத்தப்படவேண்டும் என்பவையே அவையாகும். இதேவேளை, சிறிலங்கா அரசாங்கமும் இது குறித்து கவனம் செலுத்தும் என்பதிலும் எவரும் சந்தேகம் கொள்ளத் தேவையில்லை.

1990ஆம் ஆண்டு இரண்டாம் கட்ட ஈழப் போர் ஆரம்பமாகிய பின்னர், சிறிலங்கா இராணுவம் விரிவாக்கப்பட வேண்டும் என்ற கோரிக்கை எழுந்தது. அதற்கான நடவடிக்கை உடனடியாக மேற்கொள்ளப்பட்டது. இராணுவத்தின் எண்ணிக்கையை ஒரு லட்சம் ஆக்கிவிட முயற்சி மேற்கொள்ளப்பட்டது.

இதேவேளை, 1991இல் இடம்பெற்ற ஆனையிறவுப் பெரும் சமர் இராணுவ தளபாடங்களின் தேவையில் மாற்றம் வேண்டும் என்ற கோரிக்கையை வலுவடையச் செய்தது. இதனைத் தொடர்ந்து சீன, செக்கோசெலவேக்கியக் டாங்கிகள் அறிமுகப்படுத்தப்பட்டன.

இதே போன்று விமானப்படை, கடற்படை என்பனவும் நவீனப்படுத்தும் முயற்சிகள் இடம்பெற்றன. சியாமாசெட்டி விமானங்கள் புலிகளின் தாக்குதலுக்கு அடிக்கடி இலக்கானதினாலும், காவிச் செல்லும் குண்டின் அளவு, விமானத்தின் வேகம் என்பன போதாமையும் காரணம்

## யுத்தம் முடிவு காண்பதற்கு முன்னுரிமை தர வேண்டும்

– ரொனி டி மெல்

(கொழும்பு)

யுத்தத்தை முடிவுக்குக் கொண்டுவர எடுக்கப்படும் முயற்சிகளுக்கே முன்னுரிமை கொடுக்கப்பட வேண்டும் என்று முன்னாள் நிதியமைச்சர் ரொனி டி மெல் கூறியுள்ளார்.

அகலவத்தை மகாகலும்பஹன விஹாரை சிறி சுதர்மோதய தஹம் பாடசாலையின் வருடாந்த பரிசளிப்பு வைபவத்தில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றிய அவர் மேலும் கூறுகையில், வெளிநாட்டு உதவிகள் இல்லாமல் இலங்கையின் கிராமப் புறங்களை அபிவிருத்தி செய்ய முடியாது வெளிநாட்டு உதவிகள் இல்லாவிடில் மகாவலி மற்றும் நீர்வளங்களை அபிவிருத்தித் திட்டங்கள், துறைமுகங்கள், விமான நிலையங்கள், வீதி அபிவிருத்திகள், நீர் விநியோகத் திட்டங்கள் போன்ற பலவற்றை எம்மால் பூர்த்திசெய்திருக்கவும் முடியாது எனவும் தெரிவித்தார்.

## யாழ். வைத்தியசாலையில் எக்ஸ்ரே எடுப்பதில் சிரமம்

[யாழ்ப்பாணம்]

யாழ். குடாநாட்டில் யாழ். போதனா மருத்துவமனையில் மாத்திரமே எக்ஸ்ரே படம் எடுக்கப்படுவதால் பெரும் சிரமமேற்பட்டுள்ளதாக யாழ். போதனா வைத்தியசாலை வட்டாரங்களில் இருந்து தெரியவந்துள்ளது.

இதற்குக்காரணம் முன்பு தெல்லிப்பழை, பருத்தித்துறை மருத்துவமனைகளிலும் எக்ஸ்றே படம் எடுக்கப்பட்டு வந்ததால் போதனா மருத்துவ மனைக்கு மேலதிக சிகிச்சைக்காக வருவோருக்கு மட்டுமே எக்ஸ்றே எடுக்கப்பட்டு வந்தது. தற்போது தெல்லிப்பழை மருத்துவமனை இராணுவத்தின் பிடிக்குள் அகப்பட்டுள்ளதாலும், பருத்தித்துறை மருத்துவமனையில் எக்ஸ்றே தொழில்நுட்பவியலாளர் இல்லாததன் காரணமாகவும், அப்பகுதியில் இருக்கும் நோயாளிகளும் யாழ். போதனா மருத்துவமனைக்கே வருவதனால் போதனா மருத்துவமனை எக்ஸ்றே பகுதியில் பெரும் வேலைச்சுமை ஏற்பட்டுள்ளதாக மருத்துவமனை வட்டாரங்கள் தெரிவித்தன.

இதேவேளை போதனா மருத்துவமனையில் மின்பிறப்பாக்கிகள் பழுதடைந்துள்ள காரணத்தினால போதிய மின்சாரவசதியும் இல்லாதிருப்பதால் மேலும் இப் பகுதி வேலைகள் பாதிக்கப்பட்டுள்ளன. (சி) (மா)

# கட்சியின் ஒழுக்காற்று விதி கண்டிப்புடன் அமுலாகும்

- திருமதி சிறிமாவோ

[கொழும்பு]

கட்சியின் ஒழுக்காற்று விதிகளை மீறுவோருக்கு எதிராக கடும் நடவடிக்கை எடுக்கப்படும். தனது மகள் அநுரா பண்டாரநாயக்கவும் இதிலிருந்து விதிவிலக்கு பெறமுடியாது என இவ்வாறு சுதந்திரக் கட்சியின் தலைவரும் எதிர்க் கட்சித்தலைவருமான திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்க கூறியுள்ளார்.

கட்சியின் 42-வது ஆண்டு நிறைவை முன்னிட்டு கண்டி போகம்பர மைதானத்தில் இடம்பெற்ற பொதுக்கூட்டத்தில் கட்சியின் புதிய கொள்கையை வெளியிட்டு வைத்து உரைநிகழ்த்திய அவர் மேலும் கூறுகையில் தற்பொழுதுள்ள விகிதாசார பிரதிநிதித்துவ முறையில் திருத்தம் கொண்டு வரப்படும் எனவும், தொகுதி ரீதியாக உறுப்பினர்களை தெரிவு செய்யும் முறை மீண்டும் அறிமுகம் செய்யப்படுமெனவும் தொகுதி எல்லைகளை மீள்பரிசீலனை செய்வதற்காக மீள்பரிசீலனை ஆணைக்குழு நியமிக்கப்படுமெனவும், தேசிய பட்டியலிலிருந்து தெரிவு செய்யப்படும் உறுப்பினர் எண்ணிக்கை கட்டுப்படுத்தப்படும் எனவும் இடைத்தேர்தல் நடத்த ஒழுங்கு செய்யப்படும் எனவும் தெரிவித்தார்.

### கரபந்தாட்டம

அரியாலை சிற்றம்பலம் விளையாட்டுக்கழகம் நடத்தும் கரபந்தாட்ட சுற்றுப்போட்டித் தொடரின் கால் இறுதி ஆட்டத்தில் இன்று பிற்பகல் மூன்று முப்பது மணியளவில் பாரதி விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து சிறிக்கனேஸ்வர வி.கழக அணி மோதவுள்ளது. நாளை பிற்பகல் ஆரம்பிக்கும் கால் மதிதி வி.கழக அணியை எதிர்த்து அரியாலை ஐக்கிய வி. கழக அணி மோதும்.

### விளையாட்டு

புன்னாலைக்கட்டுவன் கலைவாணி விளையாட்டுக் கழகம் உரும்பராய் இந்துக்கல்லூரி மைதானத்தில்நடாத்தும் ஒன்பது பேர் கொண்ட உதைப்பந்தாட்டச் சுற்றுப் போட்டியில் (09.09 1993) 1 ஞானமுருகன் Bமயிலங்காடு எதிர் கோல்ஸ்ரார் A கோப்பாய், 2 றோயல் A வளரெழு எதிர் அண்ணா A உரும்பராய் ஆகிய அணிகள் மோதும்.

## யாழ்ப்பாணம் செல்வதற்கு நானும் தயாராகவுள்ளேன்

சமாதாயகர் தெரிவிப்பு

[கொழும்பு]

வடக்கு- கிழக்கு இனப்பிரச்சினைக்கு தீர்வுகாண விடுதலைப்புலிகளுடன் பேச்சுவார்த்தை நடத்துவதற்கு அமைச்சர் தொண்டமான் முற்பட்டிருப்பதை நான் வரவேற்கிறேன். அவசியம் ஏற்படின் அவருடன் இணைந்து யாழ்ப்பாணம் செல்லவும் விடுதலைப்புலிகளுடன் பேச்சுவார்த்தையில் கலந்து கொள்ளவும் நானும் தயார்.

இவ்வாறு சபாநாயகர் எம். எச். முஹம்மத் பத்திரிகையாளர்களிடம் தெரிவித்துள்ளார்

இனப்பிரச்சினை நீடிப்பது நல்லதல்ல; இதனைத் தீர்க்க நாம் விரைவில் எதையாவது செய்ய வேண்டும்.

வடக்கு - கிழக்கில் அரச அதிபர்கள், உதவி அரசாங்க அதிபர்கள், உயர் அதிகாரிகள், பாதுகாப்புத் துறையினர் அனைவருமே தம்மிஷ்டப்படி செயற்படுவதாகவும், பணம் சம்பாதிப்பதாகவும், தமிழ்க் கட்சிகள் கூறுகின்றன. இந்த நிலையில் இடைக்கால நிர்வாக சபையாவது செயற்படுவது முக்கியம்.

நாட்டின் தற்போதைய பிரச்சினை தேசியப் பிரச்சினையாகும். இதைதீர்ப்பது அனைவரதும் கடமையாகும். எனவே அரசியல் பேதங்களை மறந்து அனைவரும் ஒன்றுபட வேண்டும்.

விடுதலைப் புலிகளுடன் பேச்சுவார்த்த நடத்துவதற்கு அமைச்சர் தொண்டமான் முற்பட்டிருப்பது நல்லதொரு செயலாகும். இதை நான் வரவேற்கிறேன். விடுதலைப்புலிகளுடன் பேச்சுவார்த்தை நடத்த நான் தயார். அவசிய மேற்படின் அமைச்சருடன் இணைந்து செல்ல நான் தயாராக இருக்கிறேன்.

இடைக்கால கவுன்ஸில் யோசனை எல்லோராலும் ஏற்கப்பட்டதாக இருப்பதால் அதை அடிப்படையாகக் கொண்டு செயற்பாட்டைத் தொடரலாம்.

ஐ.நா. சமாதான முயற்சி யோசனைகளை அரசாங்கம் நிராகரித்தது குறித்து நான் மகிழ்ச்சியடைகிறேன். ஐ.நா. சபை இன்று செயலிழந்த நிலையிலுள்ளது என்று அவர் அங்கு மேலும் குறிப்பிட்டார்.

# பாக்.கிற்கு சீன ஏவுகணை; இந்தியா கவலை தெரிவிப்பு

[பீகிங்]

பாகிஸ்தானுக்கு ஏவுகணை விற்றமை தொடர்பான தனது கவலையை இந்தியா சீனாவிற்குத் தெரியப் படுத்தியுள்ளது.

இந்தியப் பிரதமர் தலைமையிலான உயர்மட்டத் தூதுக் குழு தற்போது சீனாவுக்கு மேற்கொண்டிருக்கும் விஜயத்தின் போது நடைபெற்ற வெளியுறவு செயலாளர்கள் மட்ட பேச்சுவார்த்தைகளின் போதே இந்தியா இக் கவலையை வெளியிட்டது.

இதற்கு பதிலளித்த சீனா இந்தியாவுக்கு எதிராக பாகிஸ்தான் ஒரு போதும் தூண்டிவிடப்படமாட்டாது என்றும், பயங்கரவாத வன்முறைகளை

...க்கு இந்தியா அனுமதி அளிக்காது என்றும், திபெத்தியர்களின் ஆன்மீகத் தலைவர் தலாய்லாமாவை ஆன்மீகத் தலைவராக மட்டுமே இந்தியா மதிக்கிறது என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சீனப் பிரதமருக்கும், பாதுகாப்பு அமைச்சருக்கும் இந்தியாவுக்கு விஜயம் செய்யும்படி இந்தியா அழைப்பு விடுத்ததை சீனா ஏற்றுக் கொண்டுள்ளது.

அத்துடன் இராணுவ அதிகாரிகள் குழுக்களும், கலைக் குழுக்களும் பரஸ்பரம் விஜயங்களை மேற்கொள்வதற்கும் இணக்கம் காணப்பட்டுள்ளது.

1962-ம் ஆண்டில் நடைபெற்ற இந்திய சீன எல்லைப் போருக்குப் பின்னர், இரு நாடுகளின் கட்டுப்பாட்டிலுள்ள எல்லைப் பகுதியில் பதற்றத்தை தணிக்கவும், துருப்புக்களை விலக்கி வைக்கவும் இருநாடுகளும் இணக்கம் தெரிவித்த ஒப்பந்தம் ஒன்றில் கைச்சாத்திட்டுள்ளன.

## விசாரணைக்குழு அமைக்க மன்னிப்புச் சபை கோரிக்கை

(வியன்னா)

எம்பிலிப்பிட்டிய ராணுவமுகா...

...காணாமற் போன மாணவர்கள் பற்றிய விசாரணை மேற்...

## ஐ.தே.க - ஈ.பி.டி.பி. உறவு இப்படி ஒரு மாற்றம்

முன்னாள் ஜனாதிபதி பிரேமதாசாவின் மரணத்திற்குப் பின்னர் ஐ.தே.க வுக்கும் உங்களுக்கும் இடையிலான உறவு எப்படிப்பட்டது என்று ...

என்று தெரிவித்தார் அட்டகாசமாக சிரித்தபடி.

ஜலண்ட் பத்திரிகையில் வெளியிடப்பட்டிருக்கும் தேவானந்தாவுடனான பேட்...

1990ஆம் ஆண்டு இரண்டாம் கட்ட சமர்ப் போர் ஆரம்பமாகிய பின்னர், சிறிலங்கா இராணுவம் விரிவாக்கப்பட வேண்டும் என்ற கோரிக்கை எழுந்தது. அதற்கான நடவடிக்கை உடனடியாக மேற்கொள்ளப்பட்டது. இராணுவத்தின் எண்ணிக்கையை ஒரு லட்சம் ஆக்கிவிட முயற்சி மேற்கொள்ளப்பட்டது.

இதேவேளை, 1991இல் இடம்பெற்ற ஆனையிறவுப் பெரும் சமர் இராணுவ தளபாடங்களின் தேவையில் மாற்றம் வேண்டும் என்ற கோரிக்கையை வலுவடையச் செய்தது. இதனைத் தொடர்ந்து சீன, செக்கோசெலவேக்கியக் டாங்கிகள் அறிமுகப்படுத்தப்பட்டன.

இதே போன்று விமானப்படை, கடற்படை என்பனவும் நவீனப்படுத்தும் முயற்சிகள் இடம்பெற்றன. சியாமாசெட்டி விமானங்கள் புலிகளின் தாக்குதலுக்கு அடிக்கடி இலக்கானதினாலும், காவிச் செல்லும் குண்டின் அளவு, விமானத்தின் வேகம் என்பன போதாமையும் காரணம் காட்டி 'புக்காரா' குண்டு வீச்சு விமானங்களும், சுப்பர் சொனிக் விமானங்களும் அறிமுகப்படுத்தப்பட்டன. அத்தோடு, அனேக சிப்பாய்களைக் காவிச் செல்வதற்கென எம்.ஐ 8 ஹெலிகப்டர்கள் கொண்டுவரப்பட்டன.

கடற்படையின் விரிவாக்கமும் பீரங்கிப் படகுகள், அதிவேகத் தாக்கும் படகுகள், அதிவேக ரோந்துப் படகுகள் என வளர்ச்சி கண்டது. ஆயினும் போர் முனையில் ஏற்படும் மாற்றங்கள், தாக்குதல்கள், இழப்புக்கள் என்பன மேலும் படையணிகள் பெருக்கப்பட வேண்டும், தளபாடங்கள் நவீனப் படுத்தப்பட வேண்டும் என்ற கோரிக்கைகளை எழுப்பிய வண்ணமே உள்ளன.

ஆனால், கடந்த மூன்றாண்டில் நவீனப்படுத்தப்பட்ட சிறிலங்காவின் முப்படைகளும், தமது நவீனப்படுத்தல், விரிவாக்கம் என்பனவற்றிற்கு ஏற்ப சாதனைகள் புரிந்துள்ளனவா என்றால் அதற்குச் சாதகமான பதில் கூற முடியாது. இந்நிலையில் மீண்டும் விரிவாக்கம் என்பது எதுவித நன்மை பயக்கும் என்பதும், அதன் விளைவுகளும் முக்கியமானவையாகும்.

சிறிலங்கா அரசு ஒப்பீட்டு ரீதியில் இராணுவச் செலவீட்டிற்கு மிக உயர்ந்தளவு நிதி ஒதுக்கும் நாடுகளில் ஒன்று, இருப்பினும், மீண்டும் இராணுவச் செலவீட்டை அதிகரிப்பதற்கு பொருளாதார நெருக்கடியின் மத்தியில் அரசு அனுமதி அளிப்பினும் இதனால் பயன் ஏதும் கிட்டுமா என்பது சந்தேகமே.

இந்நிலையில் சிறிலங்கா பாராளுமன்றச் சபாநாயகர் எம். எச். முகமட் "வடக்கு, கிழக்கு யுத்தம் முடிவின்றி நீடிப்பதைக் கண்டு சிலர் மகிழ்ச்சியடையக் கூடியவர்களும் இருக்கின்றனர். அரசியலிலும் படையிலும் இருக்கும் இத்தகையோர் இந்த யுத்தத்தை நீடித்து பணம் தேடிக் கொள்கின்றனர்" என்றுகூறியிருப்பதுபெரும்பாலும் பொருத்தப்பாடானது என்றாலும், அதில் எமக்கு வேறு சில கேள்விகளும் உள்ளன அதாவது யுத்தத்தினால் லாபம் அடையும் அரசியல்வாதிகள் சிலரா? அல்லது பலரா? அவர்கள் அடைவது தனியாக பணலாபம் மட்டும் தானா? அதிகார பலம் அதில் இல்லையா? ஏனெனில் பௌத்த பேரினவாதிகள் யாவரும் தமது லாபத்திற்காகவே போரை நடத்துகின்றனர் என்பதே நிதர்சனம்.

[பீகிங்]

பாகிஸ்தானுக்கு ஏவுகணை விற்பனை தொடர்பான தனது கவலையை இந்தியா சீனாவிற்குத் தெரியப் படுத்தியுள்ளது.

இந்தியப் பிரதமர் தலைமையிலான உயர்மட்டத் தூதுக்குழு தற்போது சீனாவுக்கு மேற்கொண்டிருக்கும் விஜயத்தின் போது நடைபெற்ற வெளியுறவு செயலாளர்கள் மட்ட பேச்சுவார்த்தைகளின் போதே இந்தியா இக் கவலையை வெளியிட்டது.

இதற்கு பதிலளித்த சீனா இந்தியாவுக்கு எதிராக பாகிஸ்தான் ஒரு போதும் தூண்டிவிடப்படமாட்டாது என்றும், பயங்கரவாத வன்முறைகளையும், பிரிவினையையும் சீனா ஒரு போதும் ஆதரிக்காது என்றும் தெரிவித்தது.

இதே வேளை சீனாவுக்கு எதிரான நடவடிக்கைகளுக்கு இந்தியாவை ஒரு களமாகப் பயன் படுத்த திபெத்தியர்களுக்கு இந்தியா அனுமதி அளிக்காது என்றும், திபெத்தியர்களின் ஆன்மீகத் தலைவர் தலாய்லாமாவை ஆன்மீகத் தலைவராக மட்டுமே இந்தியா மதிக்கிறது என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சீனப் பிரதமருக்கும், பாதுகாப்பு அமைச்சருக்கும் இந்தியாவுக்கு விஜயம் செய்யும்படி இந்தியா அழைப்பு விடுத்ததை சீனா ஏற்றுக் கொண்டுள்ளது.

அத்துடன் இராணுவ அதிகாரிகள் குழுக்களும், கலைக்குழுக்களும் பரஸ்பரம் விஜயங்களை மேற்கொள்வதற்கும் இணக்கம் காணப்பட்டுள்ளது.

1962-ம் ஆண்டில் நடைபெற்ற இந்திய சீன எல்லைப் போருக்குப் பின்னர், இரு நாடுகளின் கட்டுப்பாட்டிலுள்ள எல்லைப் பகுதியில் பதற்றத்தை தணிக்கவும், துருப்புக்களை விலக்கி வைக்கவும் இருநாடுகளும் இணக்கம் தெரிவித்த ஒப்பந்தம் ஒன்றில் கைச்சாத்திட்டுள்ளன.

## விசாரணைக் குழு அமைக்க மன்னிப்புச் சபை கோரிக்கை

(வியன்னா)

எம்பிலிப்பிட்டிய ராணுவமுகாமிலிருந்து காணாமற்போன 46 பாடசாலைமாணவர்கள் பற்றி அறிய ஒரு விசாரணைக் குழுவை நியமிக்கும்படி சர்வதேச மன்னிப்புச் சபை ஆவுஸ்திரியாப் பிரிவு சிறிலங்கா அரசைக் கேட்டுள்ளது. பொலிசார் காணாமற் போன மாணவர்கள் பற்றிய விசாரணை மேற்கொண்டு வருகிற போதிலும் காணாமற் போனவர்கள் குறித்த விபரங்கள் எதுவும் தெரியவில்லை என இந்த அமைப்பு நீதி அமைச்சருக்குஎழுதியுள்ள கடிதத்தில் தெரிவித்துள்ளது.

## தமிழீழப் பொதுக்கல்வித் தேர்வு - 1993

நேர அட்டவணை — சுட்டெண்:

| திகதி / தினம் | முற்பகல் வேளை | பிற்பகல் வேளை |
|---|---|---|
| 93-09-28 செவ்வாய் | 1. தமிழ்மொழியும், இலக்கியமும் 8.30 - 9.15 ii 9 45 - 11 45 | 1. தமிழ்மொழியும், இலக்கியமும் iii 1.00 - 3 00 |
| 93-09-29 புதன் | 8. ஆங்கிலம் i 8.30 - 9.30 ii 9.45 - 11.45 | 5-7 சமயம் i 1.00 - 2.00 ii 2.15 - 4.15 |
| 93-09-30 வியாழன் | 2. கணிதம் ii 8.30 - 11.30 | 2 கணிதம் i 1.00 - 2.00<br>22 தட்டெழுத்து தொகுதி i 2.15 - 4.15 |
| 93-10-01 வெள்ளி | 3. விஞ்ஞானம் ii 8.30 - 11.30 | 3 விஞ்ஞானம் i 1.00 - 2.00<br>22 தட்டெழுத்துத் தொகுதி ii 2.15 - 4.15 |
| 93-10-02 சனி | 4. வரலாறும் சமூகக்கல்வியும் ii 8.30 - 11.30 | 4 வரலாறும், சமூகக்கல்வியும் i 1 00 - 2 00<br>22 தட்டெழுத்துத் தொகுதி i ii 2.15 - 4.15 |
| 93-10-03 ஞாயிறு | 9-11 அழகியல் i 8 30 - 9 30 ii 10 00 - 12 00<br>23 ஆங்கில இலக்கியம் 8.30-11 30 | 9 அழகியல் - சித்திரம் iii 1.00 - 3.00 |
| 93-10-04 திங்கள் | 12-20 தொழில்நுட்பப் பாடம் i 8 30 - 9.30 ii 9 30 - 11.30<br>22. சுருக்கெழுத்து 9 00 முதல்<br>21. வர்த்தகமும் கணக்கியலும் ii 8.30 - 11.30 | 21 வர்த்தகமும் கணக்கியலும் i 1.00 - 2.00 |

தமிழீழப் பொதுக் கல்வித் தேர்வு திட்டமிட்டபடி செப்டம்பர் மாதம் 28ஆம் திகதி தொடக்கம் ஒக்டோபர் மாதம் 4ஆம் திகதி வரை நடைபெறுமெனத் தேர்வு ஆணையாளர் தெரிவித்துள்ளார்.

நாம் விரைவில் எதையாவது செய்ய வேண்டும்.

வடக்கு - கிழக்கில் அரச அதிபர்கள், உதவி அரசாங்க அதிபர்கள், உயர் அதிகாரிகள், பாதுகாப்புத் துறையினர் அனைவருமே தம்மிஷ்டப்படி செயற்படுவதாகவும், பணம் சம்பாதிப்பதாகவும், தமிழ்க் கட்சிகள் கூறுகின்றன. இந்த நிலையில் இடைக்கால நிர்வாக சபையாவது செயற்படுவது முக்கியம்.

இடைக்கால சபை எனும் யோசனை எல்லோராலும் ஏற்கப்பட்டதாக இருப்பதால் அதை அடிப்படையாகக் கொண்டு செயற்பாட்டைத் தொடரலாம்.

ஐ.நா. சமாதான முயற்சி யோசனைகளை அரசாங்கம் நிராகரித்தது குறித்து நான் மகிழ்ச்சியடைகிறேன். ஐ.நா. சபை இன்று செயலிழந்த நிலையிலுள்ளது என்று அவர் அங்கு மேலும் குறிப்பிட்டார்.

## ஐ.தே.க - ஈ.பி.டி.பி. உறவு இப்படி ஒரு மாற்றம்

முன்னாள் ஜனாதிபதி பிரேமதாசாவின் மரணத்திற்குப் பின்னர் ஐ.தே.க வுக்கும் உங்களுக்கும் இடையிலான உறவு எப்படிப்பட்டது என்று ஈ.பி.டி.பி யின் டக்ளஸ்தேவானந்தாவிடம் கேட்கப்பட்ட போது,

பிரேமதாசா எம்மை சகோதரர்கள் என்று அழைத்தார். இப்போது 'மச்சான்' என்று அழைக்கப்படுகின்றோம் என்று தெரிவித்தார் அட்டகாசமாக சிரித்தபடி.

ஜலண்ட் பத்திரிகையில் வெளியிடப்பட்டிருக்கும் தேவானந்தாவுடனான பேட்டியில் மேலும் கூறுகையில், சில வேண்டத்தகாத விடயங்களை நாம் செய்ய முற்பட்டபோதும் கூட, முன்னாள் ஜனாதிபதி பிரேமதாசா தடுத்து வந்தார் என்றும் தெரிவித்தார்.

## ஆடைத் தொழிற்சாலை ஊழியருக்கு உயிராபத்து

கட்டுநாயக்கா சுதந்திர வர்த்தக வலயத்தில் ஆடைத் தொழிற்சாலைகளில் வேலை செய்யும் பெண்களில் 60 சதவிகிதமானவர்கள் உயிருக்கு ஆபத்து விளைவிக்கும் இரசாயனப் பொருள்களால் பாதிக்கப்பட்டுள்ளதாக மருத்துவ அறிக்கை ஒன்று கூறுகின்றது.

அரசசார்பற்ற வெளிநாட்டு அமைப்பு ஒன்றும், மீகித்தா என்ற நிறுவனமும் கூட்டாகச் செய்த ஆய்வொன்றே இதனைத் தெரிவிக்கின்றது. சமூக நல அமைப்புகள் செய்த முறைப்பாடுகளை அடுத்து இந்த மருத்துவ ஆய்வு மேற்கொள்ளப்பட்டது.

கொழும்பு பெரியாஸ்பத்திரியிலுள்ளமருத்துவ ஆடைத் தொழிற்சாலைகளில் தொழில் பார்க்கும் 1559 பெண்களை மருத்துவ பரிசோதனைக்கு உட்படுத்தியதன் பேரில் இந்த அறிக்கையை வெளியிட்டுள்ளனர்.

தொழிற்சாலைச்சூழல் மாசடைவதைத் தடுக்க எந்தச் சுகாதாரவசதிகளும் நடைமுறைப் படுத்தப்படவில்லை என்றும், ஆடைத் தொழிற்சாலை உரிமையாளருக்கு தொழிற்சாலைச் சூழலைப் பேண வேண்டிய அவசியத்தை விலக்காது விட்டால், பெண் தொழிலாளர் நாளடைவில் இரசாயனக் கலவைகளால் பெரிதும்பாதிக்கப்படுவார்கள் என்றும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

மருத்துவர்கள் 63 ஆடைத் தொழிற்சாலைகளில் மேற்கொண்ட ஆய்விலிருந்து பல பெண்களுக்கு மூட்டுவலி, தலைவலி, உணவில் விருப்பமின்மை, மார்புவலி போன்ற நோய்கள் கண்டிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

ஆடைகளுக்குத் தெளிக்கும் இரசாயனங்கள் சாயம் மற்றும் மை தயாரிக்கப் பயன்படுத்தும் இரசாயனக் கலவைகள் இந்த நோய்களுக்கான அறிகுறிகளுக்கு காரணம் என்றும், நச்சுக்காற்று வெளியேறுவதற்கு தொழிற்சாலைகளில் வெளியேற்றும் குழாய்கள் பொருத்தப்படவில்லை என்றும் ஆய்வறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் றப்பர் உபகரணங்களைச் செய்யும் தொழிற்சாலைகளில் சிங் ஒக்சைட் என்ற இரசாயனம் தகுந்த பாதுகாப்பு இன்றிப் பாவிக்கப்படுவதால் பலர் சுவாச நோய்களால் பாதிக்கப்பட்டிருப்பதாகவும்தெரியவருகிறது.

நல் வாழ்வுக்கு ஆதாரம்
தன் நிறைவான பொருளாதாரம்

ஈழநாதம்

# கடல் பிராந்திய தடை; ஒருலட்சம் குடும்பம் பாதிப்பு

(யாழ்ப்பாணம்)

வடபகுதிக் கடல் தடைப் பிராந்தியமாக அரசினால் பிரகடனப்படுத்தப்பட்டிருப்பதனால் மீன்பிடித் தொழிலில் ஈடுபட்டுவந்த 90ஆயிரம்முதல் ஒருலட்சம் வரையிலான குடும்பங்கள் தொழிலை இழந்துள்ளன.

மன்னார்முதல் திருக்கோணமலை வரையிலான கடல்பகுதி தடைப் பிராந்தியமாக்கப்பட்டிருப்பதோடு மீன்பிடிவள்ளங்கள் கூட இங்கு நடமாடத் தடை விதிக்கப்பட்டுள்ளமை தெரிந்ததே.

அரசின் இத் திடீர் அறிவிப்பினால் இத் தொழிலை ஜீவனோபாயமாக மேற்கொண்டு வந்த குடும்பங்கள் அவதிப்படுகின்றன.

மன்னாரிலும், முல்லைத்தீவிலும் இத்தடை காரணமாக இருபதினாயிரத்திற்கு மேற்பட்ட மீனவர் குடும்பங்கள் பாதிக்கப்பட்டுள்ளன என்று அறியவருகிறது.

## ஜனாதிபதி பிரிவினையை அனுமதிக்க மாட்டாராம்

(கொழும்பு)

விடுதலைப் புலிகள் கோரும் ஈழப் பிரிவினையை நான் அனுமதிக்கமாட்டேன். நாட்டிலை தற்போதைய நெருக்கடி இனவாதப் பிரச்சினையல்ல. அது பயங்கரவாதப் பிரச்சினையாகும்.

இவ்வாறு சிறிலங்கா ஜனாதிபதி டி. பி. விஜேதுங்க அம்பாந்தோட்டையில் நடைபெற்ற கூட்டமொன்றில் பேசும் போது குறிப்பிட்டார்.

விடுதலைப் புலிகள் தமிழீழப் பிரிவினை கோரி வருகின்றனர். நாடு துண்டாடப்படுவதை நான் அனுமதிக்க மாட்டேன்.

## உள்வந்த வெளிச்சென்ற வாகன இலக்கங்கள் 08-09-93

எமது பதிவில் உள்ள கடைசி இலக்கம்:- 10809

வடபகுதிக்கு உள்ளே வந்த வாகன இலக்கங்கள்:

43-2666, 26 5112, 24-6699, 26-7949, 24-6065, 42-1320, 28-2049, 27-5823, 27-7740, 26 6933, 26 4361, 41-9995, 26-6526, 26-0763, 23-5857.

வடபகுதிக்கு வெளியே சென்ற வாகன இலக்கங்கள்:

24-4108, 27-6583, 26-7272, 27-9707, 27-5217, 28 5862, 26-3633, 42-1293.


## அச்சக முகாமையாளர் தேவை

கிளிநொச்சியில் இயங்கிக்கொண்டிருக்கும் அச்சகத்திற்கு அச்சக முகாமையாளர் உடன் தேவை.


## கலந்துரையாடல்

நாளை, வெள்ளிக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு சாவகச்சேரி இந்துக்கல்லூரியில் நடைபெறவுள்ள பொதுக் கூட்டத்தில் சன சமூக நிலையங்கள், கிராம அபிவிருத்திச் சங்கங்கள், மாதர் அமைப்புக்கள், பலநோக்குக் கூட்டுறவுச்சங்க இயக்குநர்கள், ஊழியர்கள், கிராமிய உழைப்பாளர் சங்கம் தென்னங்குபனம்பொருள் உற்பத்தி விற்பனவுச் சங்கங்களின் இயக்குநர்கள், ஊழியர்கள், தச்சுத் தொழிலாளர் சங்கம், சீமெந்துக் கட்டிடத் தொழிலாளர் சங்கம், சிகை அலங்கரிப்பாளர் சங்கம், வகுப்புத் தொழிலாளர் சங்கம், ஆலை உரிமையாளர்கள், பேக்கரி உரிமையாளர்கள் சங்கம் முதலிய தென்மராட்சி கோட்ட வெகுஜன அமைப்புக்களின் உறுப்பினர்கள் கலந்து கொள்ளுமாறு யாழ் மாவட்ட அரசியல்துறை பொறுப்பாளரினால் கோரப்பட்டுள்ளது.

எதிர்வரும் 11 ஆம் திகதி

## மூன்று அமர்வுகளாக யாழ். பல்கலை. பட்டமளிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் பல்கலைக் கழகத்தின் பதின்மூன்றாவது பட்டமளிப்பு விழா மூன்று அமர்வுகளில் செப்ரெம்பர் 11 ஆம் திகதியன்று நடைபெறவுள்ளது. துணைவேந்தர் பேராசிரியர் அ. துரைராஜா விழாவுக்கு தலைமை தாங்குவார்.

முதலாவது அமர்வில் முதுமெய்யியல்மாணி, முதுகலைமாணி பட்டப்பின் கல்வித் தகைமைச் சான்றிதழ், மருத்துவ சத்திர சிகிச்சைமாணி, சித்தமருத்துவ சத்திரசிகிச்சை மாணி, வர்த்தகமாணி ஆகிய பட்டங்கள் வழங்கப்படும். இரண்டாவது அமர்வில் கலாநிதி (விஞ்ஞானம்), முதுவிஞ்ஞானமாணி, தொழில்நிர்வாக மாணி ஆகிய பட்டங்கள் வழங்கப்படும். மூன்றாவது அமர்வில் கலாநிதி (கலை), கலைமாணி, இசைக்கலைமாணி, நடனக்கலைமாணி, ஆகிய பட்டங்கள் வழங்கப்படும்.

மறுநாள் 12ஆம் திகதி இராமநாதன் நுண்கலைத் துறை மாணவர்கள் வழங்கும் கலைநிகழ்ச்சி நடைபெறவுள்ளது.

பெருமாட்டி லீலாவதிஇராமநாதன் நினைவுப் பேருரையும், சேர். பொன் இராமநாதன் நினைவுப் பேருரையும் 13ஆம் திகதியும், 14ஆம் திகதியும் பி.ப 3 மணிக்கு நடைபெறவுள்ளன இந்தப் பேருரை

சமூகமளிக்காத நிலையில் 143 பேர் பட்டங்களைப் பெறவுள்ளனர்.

முறையே தாவரவியலிலும், புவியியலிலும் இருவர் கலாநிதிப்பட்டம் பெறவுள்ளனர். 15பேர் முதுவிஞ்ஞானமாணி முதுகலைமாணி முதுமெய்யியல்மாணி ஆகிய பட்டங்களைப் பெறவுள்ளனர். சித்தமருத்துவ சத்திர சிகிச்சை மாணிப் பட்டம் 14 பேருக்கு வழங்கப்படவுள்ளது.

போக்குவரத்துச் சிக்கல் காரணமாக வெளிமாவட்ட மாணவர்கள் பலர் பட்டமளிப்பு விழாவில் சமூகமளித்துப் பட்டங்களைப் பெறமுடியாத நிலை ஏற்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. இதனால்தான் 143பேரும் பட்டமளிப்பு விழாவில் சமூகமளிக்காத நிலையில் பட்டங்களைப் பெறவுள்ளார்கள்.

கொழும்பு சோதனை நடவடிக்கை

## அடையாள கடிதங்களை ஏற்குமாறு பணிப்பு

[கொழும்பு]

கொழும்பில் வாகனச் சோதனை, வீதிச் சோதனை மற்றும் தேடுதல் நடவடிக்கைகளின் போது தேசிய அடையாளஅட்டையில்லாதோரிடம் அதற்குப் பதிலாக அவர்களின் ஆள் அடையாளத்தை உறுதி

கொழும்பிலும்அதன்சுற்றுப் புறங்களிலும் சிறிலங்காவின் பொலிஸ், இராணுவத்தினர் திடீர் திடீரென மேற்கொள்ளும் தேடுதல் நடவடிக்கைகள் மற்றும் சுற்றி வளைப்புகளின் போது அடையாள அட்டை இல்லாதபல இளைஞர்கள் கைது செய்யப்படுகின்

# பரீட்சைக்கு பேராதனை சென்ற 16 யுவதிகள் உட்பட 40 பேர் கைது

(கொழும்பு)

கலை முதற் தேர்வு பரீட்சைக்காக கொழும்பு சென்ற 40 வடபகுதி இளைஞர்களும் யுவதிகளும் சிறிலங்கா பொலிஸ் இராணுவ கூட்டு அணியினரால் கைது செய்யப்பட்டு நாலாம் மாடியில் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.

பேராதனைப் பல்கலைக்கழக கலை முதல் தேர்வு பரீட்சைக்கு தோற்றுவதற்காக கடந்த மாதம் யாழ்ப்பாணத்திலிருந்து சென்ற இளைஞர்களும் யுவதிகளுமே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளனர்.

கொழும்பிலும் அதன் சுற்றுப்புறங்களிலும் தங்கியிருந்த இவர்களை பொலிஸ் இராணுவ கூட்டு அணியினர் கைது செய்து முகமூடிகள் முன்னிலையில் நிறுத்திய போது 24 இளைஞர்களும் 16யுவதிகளும் முகமூடிகளால் அடையாளம் காட்டப்பட்டதைத் தொடர்ந்து இவர்கள் அனைவரும் நாலாம் மாடிக்கு கொண்டு செல்லப்பட்டு அங்கு தடுத்து வைக்கப்பட்டுள்ளனர். ஏனையோர் விடுவிக்கப்பட்டனராம். முகமூடிகளால் அடையாளம் காட்டப்பட்டவர்களை தடுத்து வைப்பதற்கான உத்தரவு பிறப்பிக்கப்பட்டதை அடுத்து அந்த தொடர்ந்து தடுப்புக்காவலில் வைத்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. (தி)

## கொடுப்பனவு தாமதம்

(யாழ்ப்பாணம்)

வடக்கு கிழக்கு மாகாண சபை சுகாதார அமைச்சு யாழ் பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனைக்கு கடந்த மாதம் கட்டுநிதி அனுப்பவில்லையென தெரியவந்துள்ளது.

இக்கட்டுநிதி வந்து சேராததினால் பிராந்திய சுகாதார சேவைகள் பணியகத்தினால் வழங்கப்படவேண்டிய சகலகொடுப்பனவுகளும் தாமதமடைந்துள்ளதாக அவ்வட்டாரங்கள் தெரிவித்தன (சி)

## சமூகமளிக்க வேண்டுகோள்

தீவகத்திலிருந்து இடம்பெயர்ந்த வேலணை, ஊர்காவற்துறை பிரதேச செயலகங்களின் நிர்வாக எல்லைக்கு உட்பட்ட சகல பாடசாலை அதிபர்களும் நாளை வெள்ளிக்கிழமை காலை பத்து மணியளவில் வேலணைப் பிரதேச செயலகத்தில் சமூகமளிக்கும்படி தீவுப்பகுதி பிரதேச செயலர் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

## புதிய விசாரணைக்கு திருமதி லலித் கோரிக்கை

[கொழும்பு]

லலித் அத்துலத்முதலி கொலை தொடர்பாக முன்னர் நடத்தப்பட்ட விசாரணைகள் திருப்தியளிக்கவில்லை எனக் கூறியிருக்கும் அவரின் மனைவி சிறிமணி அத்துலத்முதலி புதியபொலிஸ் விசாரணைக்கு உத்தரவிடுமாறு ஜனாதிபதி விஜேதுங்கவைக் கேட்டிருக்கின்றார்.

லலித் கொலை தொடர்பாக விசாரணைகளை மீளாய்வு செய்த ஸ்கொட்லண்ட் யார்ட் குழு சமர்ப்பித்த அறிக்கை தொடர்பாக லலித்தின் சட்டத்தரணிகள் தயாரித்த மதிப்பீட்டு அறிக்கையையும் திருமதி அத்துலத்முதலிதனது கோரிக்கைக்கு ஆதாரமாக ஜனாதிபதிக்கு அனுப்பிவைத்துள்ளார்.


விடுதலைப் புலிகள் கலை பண்பாட்டுக் கழகத்தினரால் நடாத்தப்படும்

## மாபெரும் இசை நிகழ்ச்சி

தமிழீழத்தின் தலை சிறந்த இசைக் குழுக்களான

"ராஜன் - சுகந்தன்"

ஒரே மேடையில் இணைந்து வழங்கும்

"காற்றினிலே வரும் கீதம்"

காலம்: 11-09-93 ல் சாவகச்சேரி இந்துக் கல்லூரியிலும்

12-09-93-ல் மானிப்பாய் மாவீரர் கலையரங்கிலும்

மாலை 7.00 மணிக்கு நடைபெறும்.

அனைத்து மக்களும் அணிதிரண்டு வருக

ரிக்கட் பெறும் இடங்கள்:

சூலம் கிறீம் ஹவுஸ்

சன் றைக்கோடிங் சென்ரர் நியூமாக்கற்

மண்டப வாயிலிலும் பெற்றுக்கொள்ளலாம்.

விடுதலைப்புலிகள் கலை பண்பாட்டுக்கழகம்

விளம்பர அன்பளிப்பு: வர்த்தகர் சங்கம், யாழ்ப்பாணம். (5926)

எமது பகுதிகளில் உள்ள மொத்த இலக்கம்:- 10809

வடபகுதிக்கு உள்ளே வந்த வாகன இலக்கங்கள்:

43-2666, 26 5112, 24:6699, 26-7949, 24-6065, 42-1320, 28-2049, 27-5823, 27-7740, 26 6933, 26 4361, 41-9995, 26-6526, 26-0763, 22-5857.

வடபகுதிக்கு வெளியே சென்ற வாகன இலக்கங்கள்:

24-4108, 27-6583, 26-7272, 27-9707, 27-5217, 28 5862, 26-3633, 42-1293.


## அச்சக முகாமையாளர்

## தேவை

கிளிநொச்சியில் இயங்கிக்கொண்டிருக்கும் அச்சகத்திற்கு அச்சக முகாமையாளர் உடன் தேவை.

ஐந்து வருட அனுபவமும், ஆங்கில அறிவும் உடையவராக இருத்தல் வேண்டும்.

தொடர்பு:

ஈழநாதம்,
31, மகேந்திரா வீதி,
யாழ்ப்பாணம்.

[இ]



## விற்பனைக்குண்டு

இறைச்சிக்கு

புறொயிலர் (Broiler)

கோழிகள் விற்பனைக்குண்டு

தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்துடன்

[தாவடி]

தொடர்பு கொள்ளுங்கள்.

(சி-7382)



## தமிழீழ காவல்துறையினருக்கு

## எமது பாராட்டு

எமது வீடியோ ஸ்தாபனத்தில் 12-11 92 இல் களவாடப்பட்ட ஓர் இலட்சம் பெறுமதியான பொருட்களை மீட்டெடுத்துத் தந்தமைக்காக தமிழீழ காவல்துறையின் குற்றப் புலனாய்வுப் பிரிவினருக்கு எமது நன்றியையும் பாராட்டையும் தெரிவித்துக்கொள்கின்றோம்.

உரிமையாளர்

மேகாஸ் வீடியோ, N. S இரவீந்திரன்
கண்டி வீதி, (மாம்பழம் சந்தி)
அரியாலை, யாழ்ப்பாணம். [5925]



இப்பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி, 31ஆம் இலக்கத்திலுள்ள "ஈழநாதம்" பணிமனையில் 1993-ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 09 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது


இரண்டாவது அமர்வில் கலாநிதி (விஞ்ஞானம்), முதுவிஞ்ஞானமாணி, தொழில்நிர்வாகமாணி ஆகிய பட்டங்கள் வழங்கப்படும். மூன்றாவது அமர்வில் கலாநிதி (கலை), கலைமாணி, இசைக்கலைமாணி, நடனக்கலைமாணி, ஆகிய பட்டங்கள் வழங்கப்படும்.

மறுநாள் 12ஆம் திகதி இராமநாதன் நுண்கலைத் துறை மாணவர்கள் வழங்கும் கலைநிகழ்ச்சி நடைபெறவுள்ளது.

பெருமாட்டி லீலாவதி இராமநாதன் நினைவுப் பேருரையும், சேர். பொன் இராமநாதன் நினைவுப் பேருரையும் 13ஆம் திகதியும், 14ஆம் திகதியும் பி.ப 3 மணிக்கு நடைபெறவுள்ள இந்தப் பேருரைகளை முறையே யாழ் பல்கலைக் கழக இந்து நாகரிகத் துறைத் தலைவர் கலாநிதி பரோபாலகிருஷ்ணன், யாழ் பல்கலைக் கழக முகாமைத்துவத் தலைவர் எம். நடராஜசுந்தரம் ஆகியோர் நிகழ்த்துவார்கள்.

கடந்த சில வருடங்களைப் போல் இம் முறையும் பட்டமளிப்புப் பேருரை இடம் பெறாது எனத் தெரியவருகிறது.

யாழ்ப்பாணப் பல்கலைக் கழகப் பட்டமளிப்பு விழா மூன்று அமர்வுகளிலும் மொத்தம் 641 பேருக்குப் பட்டங்கள் வழங்கப்படவுள்ளன. இவர்களில் 498 பேர் பட்டமளிப்பு விழாவில் சமுகமளித்துப் பட்டங்களைப்பெறவுள்ளனர். பட்டமளிப்பு விழாவில் நிலை ஏற்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. இதனால்தான் 1433பேரும் பட்டமளிப்பு விழாவில் சமுகமளிக்காத நிலையில் பட்டங்களைப் பெறவுள்ளார்கள்.

### போரின்

நிதி விக்கிரமபாகு கருணாரட்ன தெரிவித்துள்ளார்.

பத்திரிகையாளர் சங்க கூட்டம் ஒன்றில் பேசிய அவர், இது பயங்கரவாத பிரச்சினையல்ல இது நாட்டின் அடிமுக்கிய பிரச்சினை என்பதை மக்கள் உணரச் செய்ய பத்திரிகைகள் முன்வர வேண்டும் என்றும் கோரிக்கை விடுத்தார்.

### கடற்படை

படையினர் இரவில் பராவெளிச்சத்தின் உதவியுடனும் பகலில் கடும் துப்பாக்கி வேட்டுக்களின் மத்தியிலும் ரோந்து செய்து வருகின்றனர்.

மாறுபட்ட பாதைகளிலும் ரோந்துச் சேவை காணப்படுகிறது. அதேசமயம் கடலில் மீனவர்கள் மீது தாக்குதலை மேற்கொள்ளும் கடற்படையினர் மின்னல் வேகத்தில் ஓடி மறைந்து விடுகின்றனர். இரண்டு விசைப் படகுகள் கூட்டாக சேவையில் ஈடுபட்டுவருகிறன. (யோ)

கொழும்பு சோதனை நடவடிக்கை

# அடையாள கடிதங்களை ஏற்குமாறு பணிப்பு

[கொழும்பு]

கொழும்பில் வாகனச் சோதனை, வீதிச் சோதனை மற்றும் தேடுதல் நடவடிக்கைகளின் போது தேசிய அடையாள அட்டையில்லாதோரிடம் அதற்குப் பதிலாக அவர்களின் ஆள் அடையாளத்தை உறுதி செய்யும் கிராமசேவகர், உயர் அதிகாரிகளின் கடிதங்களை பொலிஸ், இராணுவத்தினர் ஏற்றுக் கொள்ளுமாறு பணிக்கப் பட்டுள்ளனர் என்று பாதுகாப்பு அமைச்சின் உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

கொழும்பிலும் அதன்சுற்றுப் புறங்களிலும் சிறிலங்காவின் பொலிஸ், இராணுவத்தினர் திடீர் திடீரென மேற்கொள்ளும் தேடுதல் நடவடிக்கைகள் மற்றும் சுற்றி வளைப்புகளின் போது அடையாள அட்டை இல்லாத பல இளைஞர்கள் கைது செய்யப்படுகின்றனர் இதன் போது இவர்கள் தமது அடையாளத்தை உறுதிப்படுத்த மேற்படி கடிதங்களை சமர்ப்பிக்கலாம்எனவும் அவ் அதிகாரி சுட்டிக்காட்டினார்.

# சட்டத்தரணிகள் கொலையில் சிறிலங்காவிற்கு முக்கிய இடம்

சட்டத்தரணிகள் அதிகப்படியாகக் கொல்லப்படும் நாடு சிறிலங்கா கடந்த மூன்று வருடங்களில் 20க்கும் அதிகமான சட்டத்தரணிகள் கொலை செய்யப்பட்டுள்ளார்கள். இவ்வாறு மனித உரிமைகள் சட்டத்தரணிகள் அமைப்பு தெரிவித்துள்ளது.

மனித உரிமைகள் மீறல்களுக்கு அஞ்சி நாடுகடந்துவாழும் சிறிலங்கா சட்டத்தரணிகளின் அமைப்பின் தலைவர் பிரின்ஸ் குணசேகரா இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் செப்ரெம்பர் 12 முதல் 16 வரை கொழும்பில் நடைபெறவுள்ள 'சட்ட ஆசியா' மகாநாட்டிடம், கொலை செய்யப்பட்ட சட்டத்தரணிகளுக்கு நஷ்டஈடு வழங்கும்படி கேட்கப் போவதாகவும், சட்டத்தரணிகள் கொலைகள் பற்றி விசாரிக்க சர்வதேச ஆணைக்குழு ஒன்றை நியமிக்கும்படி கோரவுள்ளதாகவும் தெரிவித்தார்.

பிரின்ஸ் குணசேகர முன்னாள் ஹபரதுவ பாராளுமன்ற உறுப்பினர் என்பது குறிப்பிடத்தக்கது சிறிலங்காவைச் சேர்ந்த மனித உரிமைச் சட்டத்தரணிகள் 35 பேர் வெளிநாடுகளில் தஞ்சம்கோரி வாழ்வதாகவும், அவர்களில் 24 பேர் லண்டனில் தஞ்சமடைந்துள்ளதாகவும்கூறினார்.

இங்கிலாந்தின் பாராளுமன்ற மனித உரிமைகள் குழுவின் தலைவர் ஆர்பெரி பிரபு சட்டத்தரணிகள் கொலைகள் குறித்து 'சட்ட ஆசியா' செயலருக்குக் கடிதம் ஒன்று எழுதியுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

### பாடசாலை

காரணம் ஒரு காட்டுப்பூனை தானாம். உயர்தர வகுப்பு மாணவர்கள் சிலர் காட்டுப் பூனை ஒன்றை ஆய்வுகூட பரிசோதனைக்காக எடுத்துவந்ததை அதிபர் ஆட்சேபித்ததாகவும், இதனை மாணவர்கள் ஏற்காததைத்தொடர்ந்து களேபரம் ஏற்பட்டதாகவும் கூறப்படுகிறது.

### மலையக

விரும்பும் தொழிலாளர்களுக்கு தேவையான சகல உதவி வழங்கப்படும் என்று கூறியிருப்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது.

### தீர்த்தத்திருவிழா

அலவெட்டி தெற்கு நாகேஸ்வரம் சிறி நாகவரத நாராயணர் ஆலயத்தில் இன்று வியாழக் கிழமை முற்பகல் 11 மணிக்கு தீர்த்தத்திருவிழாவும் நாளை வெள்ளிக் கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு திருக்கல்யாணமும் நடைபெறும்.

### யாழ்

கும் இடம்பெயர்ந்த மக்களையும் இதுவரை சென்று பார்த்துள்ளார். இவர் மேலும் சில தினங்கள் இங்கு தங்கியிருப்பார் என்று தெரிய வருகிறது.

இழமை காலை பத்து மணியளவில் வேலணைப் பிரதேச செயலகத்தில் சமுகமளிக்கும் படி தீவுப்பகுதி பிரதேச செயலர் வேண்டுகோள் விடுத்துள்ளார்.


காலம்: 11 09-93 ல்
சாவகச்சேரி இந்துக் கல்லூரியிலும்

12-09-93-ல்
மானிப்பாய் மாவீரர் கலையரங்கிலும்

மாலை 7.00 மணிக்கு நடைபெறும்.

அனைத்து மக்களும் அணிதிரண்டு வருக

ரிக்கட் பெறும் இடங்கள்:
குலம் கிறீம் ஹவுஸ்
சன் றைக்கோடிங் சென்ரர் நியூமாக்கற்
மண்டப வாயிலிலும் பெற்றுக்கொள்ளலாம்.

விடுதலைப்புலிகள் கலை பண்பாட்டுக்கழகம்

விளம்பர அன்பளிப்பு:
வர்த்தகர் சங்கம், யாழ்ப்பாணம். (5926)



## 1-ம் ஆண்டு வீர அஞ்சலி



தாயின் மடியில்: 08 - 04 - 1972
தாயக மண்ணில்: 09 - 09 - 1992

### கப்டன் நந்தன்

[வெள்ளைச்சாமி சுரேஸ்குமார்]

[நாச்சிக்குடா சீனன்குடா, திருமலை]

தென் தமிழீழத்தில் திருமலை ஊர்தனிலே
பைந்தமிழ் செல்வன் சுரேஸ்குமார் உதித்திட்டான்
ஒழுங்குடன் ஒழுக்கமும் சேர்ந்து — நல்ல
வீரனாய் விவேகியாய் வரிப்புலியாக புறப்பட்டான்
ஆண்டபரம்பரை அன்னியனுக்கு அடிமைப்படுவதா
— வேண்டாம்
அடிமை விலங்கினை அறுத்தெறிவேன் — என்று
நெஞ்சிலே வீரமும் கரத்திலே ஆயுதமும் ஏந்தி
சொந்த மண்ணினை மீட்டிட புறப்பட்டான்.

உமது ஆத்மா சாந்தியடையப்
பிரார்த்திக்கின்றோம்

[சி-7378] தாய், தந்தை,
சகோதர சகோதரிகள்.